அந்தரங்கமானது

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2023 (2024)

32- வணிகக் கல்வி

புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

[සියලු හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

ව්‍යාපාර අධ්‍යයනය I வணிகக் கல்வி I Business Studies I	32 T I	පැය දෙකයි இரண்டு மணித்தியாலம் Two hours

අරිවුරුත්තල්කළ් :

- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணை** தெளிவாக எழுதுக.
- **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் : .....

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

வினாத்தாள் I இற்கானது	
வினா இல	புள்ளிகள்
01 - 30	
31 - 50	
மொத்தம்	

	ஒப்பம்	குறியீட்டெண்
1 ஆம் பரீட்சகர்		
2 ஆம் பரீட்சகர்		
மேலதிக பிரதம பரீட்சகர்		
எண்கணித பரிசோதகர்		
பிரதம பரீட்சகர்		

1. தேவைகள் மற்றும் விருப்பங்கள் தொடர்பிலான உதாரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - சுகாதாரம் B - உறைவிடம்
C - உடைகள் D - மடிக்கணினிகள் (Laptops)
E - குளிர்பானங்கள் F - செல்லிடத் தொலைபேசிகள்
G - கதைப் புத்தகங்கள் H - உணவு

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் விருப்பங்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ள தெரிவு யாது?

(1) A, C, D, E (2) A, C, E, H (3) C, D, E, F (4) C, D, E, H (5) D, E, F, G (.....)

2. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் சேவை ஒன்றில் காணப்படக்கூடிய குணாம்சத்தினைக் கொண்ட சரியான விடையைத் தெரிவுசெய்க.

(1) தொட்டுணரக்கூடியது (2) கைமாற்றக்கூடியது
(3) மீள திரும்பக்கூடியது (4) பிரிக்க முடியாதது
(5) அழிவடையாதது

(.....)

3. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சேவைத் துறை பிரதிநிதித்துவப்படுத்தப்படுவது

(1) பொதுத் துறையினூடாக. (2) தனியார் துறையினூடாக.
(3) முதனிலைத் துறையினூடாக. (4) இரண்டாந்தரத் துறையினூடாக.
(5) மூன்றாந்தரத் துறையினூடாக.

(.....)

4. உலகில் பொதுவாகக் காணப்படும் சில பிரச்சினைகள் பின்வருமாறு

A - காடழிப்பு B - உடற்பருமன்
C - வருமான சமமின்மை D - வலி மாசடைதல்
E - மூளைசாலிகள் வெளியேற்றம் F - உயிர்ப் பல்வகைமை இழப்பு
G - வேலைவாய்ப்பின்மை H - மண் அரிப்பு

மேலே தரப்பட்டுள்ளவற்றுள், சமூக - பொருளாதார பிரச்சினைகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ள தெரிவு யாது?

(1) A, B, E, F (2) B, C, E, G (3) B, C, E, H (4) C, D, E, G (5) C, E, G, H (.....)

5. இலங்கையின் 2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகார சபைச் சட்டத்தில் **உள்ளடக்கப்படாத** நோக்கத்தினைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

(1) அபாயகரமான பொருட்களின் சந்தைப்படுத்தலிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல்
(2) நியாயமற்ற வியாபார நடைமுறைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல்
(3) நுகர்வோர் தொடர்பில் பொருட்கள் சேவைகள் தாராளமாக கிடைப்பதனை உறுதிசெய்தல்
(4) நியாயமற்ற வியாபார நடைமுறைகளுக்கு எதிராக நுகர்வோருக்கு இழப்பீட்டினைப் பெற்றுக்கொடுத்தல்
(5) பொருட்கள், சேவைகள் தொடர்பில் நுகர்வோருக்கு போட்டித்தன்மை வாய்ந்த விலைகளுக்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்தல்

(.....)

[பக். 2 ஐப் பார்க்க


6. பின்வரும் அட்டவணையானது வணிகத்தில் அக்கறையுடைய சில தரப்பினரையும், வணிக நடவடிக்கைகளில் அவர்களது ஈடுபாடுகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

அக்கறையுடைய தரப்பினர்	ஈடுபாடு
(i) பங்குதாரர்கள்	A - இயக்குநர் சபையைத் தெரிவுசெய்தல்
(ii) நுகர்வோர்கள்	B - தந்திரோபாயங்களை உருவாக்குதல்
(iii) வழங்குநர்கள்	C - செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
(iv) முகாமையாளர்கள்	D - வியாபார நிந்தனைகள் பற்றிக் கலந்துரையாடுதல்
(v) ஊழியர்கள்	E - உற்பத்திப்பொருட்களின் தரம் தொடர்பில் பிரதிபலிப்பினை வழங்குதல்

மேலே தரப்பட்டுள்ள அக்கறையுடைய தரப்பினரின் ஒழுங்கிற்கு அமைவாக ஈடுபாட்டினை சரியாகக் காட்டும் தெரிவு யாது?

(1) A, D, E, B, C (2) A, E, D, B, C (3) B, E, C, D, A
(4) D, B, A, C, E (5) D, E, B, A, C (.....)

7. கீழே தரப்பட்டுள்ள வரைபடத்திற்கு அமைவாக வினவப்பட்டுள்ள வினாவிற்கு விடை தருக.



மேற்குறித்த வரைபடத்தில் வசதிப் பண்டம் ஒன்றுக்கான கொள்வனவு ஆற்றலுக்கும் பணவீக்கத்திற்கும் இடையிலான தொடர்பினை சரியாக எடுத்துக் காட்டும் எழுத்து / எழுத்துக்கள் யாது / யாவை?

(1) Ⓐ மாத்திரம் (2) Ⓓ மாத்திரம்
(3) Ⓐ யும் Ⓓ யும் மாத்திரம் (4) Ⓑ யும் Ⓒ யும் மாத்திரம்
(5) Ⓒ யும் Ⓓ யும் மாத்திரம் (.....)

8. அரச மற்றும் வணிகங்களின் இலக்குகள் சில பின்வருமாறு.

A - வேலை - வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் B - கைத்தொழில்மயமாதலை மேம்படுத்துதல்
C - உற்பத்திப்பொருட்களை உருவாக்குதல் D - வருமான மீள்பகிர்வு
E - நிரைதொழில் மட்டத்தினைப் பராமரித்தல் F - விலைகளின் ஸ்திரத்தன்மை
G - ஊழியர் ஈடுபாட்டினை மேம்படுத்துதல் H - கூட்டு ஆளுகையை நடைமுறைப்படுத்தல்

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் அரச இலக்குகளை மாத்திரம் கொண்டுள்ள தெரிவு யாது?

(1) A, C, G, H (2) A, D, E, F (3) B, D, E, F (4) B, D, F, G (5) D, E, F, G (.....)

9. பங்குடைமை வியாபாரம் ஒன்றில் வரையறுத்த பங்காளர்களை இனங்காணக்கூடியதாக அமைவது

(1) வரையறுத்த பொறுப்பு கொண்டுள்ளமை மூலமாகும்.
(2) முகாமையில் ஈடுபாடு கொள்வது மூலமாகும்.
(3) முகாமையில் ஈடுபடாத் தன்மையின் மூலமாகும்.
(4) வரையறுத்த பொறுப்பும், முகாமையில் ஈடுபாடு கொள்வதும் மூலமாகும்.
(5) வரையறுத்த பொறுப்பும், முகாமையில் ஈடுபடாத் தன்மையின் மூலமுமாகும். (.....)

10. கம்பனி ஒன்றினை கூட்டிணைக்கும்போது பயன்படுத்தப்படும் ஆவணங்கள் தொடர்பிலான இரண்டு கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

கூற்று A : வழங்கப்படக்கூடிய பங்குகள் தொடர்பான விபரங்களும் பணிப்பாளர்களது அதிகாரங்கள், கடமைகள் தொடர்பான விபரங்களும் அமைப்பு அகவிதியில் காட்டப்படும்.

கூற்று B : பங்குதாரர்களது வாக்களிக்கும் உரிமைகள் தொடர்பான விபரங்களும் விதிகள் பிரமாணங்கள் தொடர்பான விபரங்களும் கூட்டிணைத்தற் சான்றிதழில் காட்டப்படும்.

மேலே தரப்பட்டுள்ள இரண்டு கூற்றுக்களில்

(1) **A** மாத்திரம் சரியானதாகும்.
(2) **B** மாத்திரம் சரியானதாகும்.
(3) **A**, **B** ஆகிய இரண்டும் பிழையானதாகும்.
(4) **A** யும் **B** யும் சரியாகும் அதேவேளை **B** யினூடாக **A** விபரிக்கப்படுகின்றது.
(5) **A** யும் **B** யும் சரியாகும் அதேவேளை **B** யினூடாக **A** விபரிக்கப்படவில்லை. (.....)

11. முயற்சியாண்மைச் செயன்முறையின் படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - யதார்த்த நிலையினை ஏற்படுத்திக் கொடுத்தல்
B - புதியனவற்றைக் கண்டுபிடித்தல்
C - பிரதிபலன்களை பெற்றுக்கொள்ளல்
D - வணிகத் திட்டத்தைத் தயாரித்தல்
E - வள உருவாக்கம்
மேலே தரப்பட்டுள்ள முயற்சியாண்மைச் செயன்முறையின் படிமுறைகளை பிழையின்றி ஒழுங்காகக் காட்டுகின்ற தெரிவு யாது?
(1) A, C, D, B, E (2) B, C, A, E, D (3) B, D, E, A, C
(4) D, A, B, E, C (5) D, E, A, B, C (.....)

12. மூன்றாம் தரப்பினரின் ஈடுபாடு **தேவைப்படாத** பரிமாற்று ஊடகம் ஒன்றாவது
(1) காசு (ரொக்கம்) (2) காசோலை (3) கடன் அட்டை
(4) இலத்திரனியல் காசு (5) முற்செலுத்திய அட்டை (.....)

13. காவியின் காசோலை தொடர்பில் சரியான கூற்றினை தெரிவுசெய்க.
(1) கிழிந்த அல்லது சேதமான காசோலை
(2) தொகை குறிப்பிடப்படாது கையொப்பமிடப்பட்டது
(3) காலம் கடந்ததன் காரணமாக மேற்கொண்டு செல்லுபடியற்றது
(4) வங்கியில் சமர்ப்பிக்கின்ற எந்த ஒருவருக்கும் பணத்தினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவோ அல்லது வைப்புச் செய்யக்கூடியதாகவோ இருத்தல்
(5) காசோலையில் பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு மாத்திரம் பணத்தினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவோ அல்லது வைப்பிலிடக்கூடியதாகவோ இருத்தல் (.....)

14. ஒரு நிறுவனம் மோட்டார் வாகனக் காப்புறுதி ஒப்பந்தமொன்றினைப் பெற்றுக்கொள்வதன் நோக்கமாவது
(1) இடரை இழிவுபடுத்த ஆகும். (2) இடரைத் தவிர்க்க ஆகும்.
(3) இடரைக் கைமாற்ற ஆகும். (4) இடரைத் தாங்கிக்கொள்ள ஆகும்.
(5) இடரை ஏற்றுக்கொள்ள ஆகும். (.....)

15. பின்வருவனவற்றுள் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் நிதி ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதில் விசேடமாக அக்கறை செலுத்தும் சர்வதேச அமைப்பு எது?
(1) உலக வியாபார ஸ்தாபனம் (WTO)
(2) சர்வதேச நாணய நிதியம் (IMF)
(3) சர்வதேச தொழில் தாபனம் (ILO)
(4) தென்கிழக்காசிய நாடுகளின் அமைப்பு (ASEAN)
(5) வங்காள விரிகுடாவைச் சுற்றியுள்ள நாடுகளின் பல்துறை தொழிலுட்ப பொருளாதார ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு (BIMSTEC) (.....)

16. தொடர்பாடல் ஊடகங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - கடிதம்
B - அறிவித்தல்
C - தொலைபேசி
D - நேருக்கு நேர் சந்தித்தல்
E - காணொளி மாநாடு
F - செயற்கை நுண்ணறிவு உரையாடலிடம் (AI chatbot)
G - ஞாபகக் குறிப்பு
H - தொலைநகல்
மேலே தரப்பட்டுள்ளவற்றுள், விரைவான பின்னூட்டலைத் தரக்கூடிய ஊடகங்களை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?
(1) A, C, D, F (2) B, C, D, E (3) B, D, E, F (4) C, D, E, F (5) C, E, F, G (.....)

17. திட்டத்தினைச் சரியாக நடைமுறைப்படுத்துவதினூடாக உறுதிப்படுத்திக்கொள்ள முடிவது
(1) பயனுறுதியை ஆகும். (2) இலாபத்தன்மையை ஆகும்.
(3) உற்பத்தித்திறனை ஆகும். (4) நிலைபேறான தன்மையை ஆகும்.
(5) வினைத்திறனை ஆகும். (.....)

18. பின்வருவனவற்றுள் தீர்மானம் எடுப்பதில் எந்த தலைமைத்துவப் பாங்கானது சூழ்நிலைமைவிற்கு ஏற்ப செயற்படும்?
(1) ஜனநாயக (2) சர்வாதிகார (3) சூழ்நிலை
(4) தலையிடா (5) பணி நோக்கிய (.....)

19. 2021ம் வருட இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கு அமைவாக நுண், சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் (MSME) தொடர்பில் விருத்தி செய்யப்பட்ட இரண்டு கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

கூற்று A : இலங்கையின் பொருளாதாரத்துக்கு நுண், சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களானது 50% இனைக் காட்டிலும் அதிகமாகப் பங்களிப்புச் செய்கின்றன.

கூற்று B : இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களின் (MSME) பங்களிப்பானது அயல்விருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது ஒப்பீட்டளவில் உயர்வானதாகும்.

மேலே தரப்பட்டுள்ள இரண்டு கூற்றுகளில்

(1) **A** மாத்திரம் சரியானதாகும்.
(2) **B** மாத்திரம் சரியானதாகும்.
(3) **A**, **B** ஆகிய இரண்டும் பிழையானதாகும்.
(4) **A**யும் **B**யும் சரியாகும் அதேவேளை **B** யினூடாக **A** விபரிக்கப்படுகின்றது.
(5) **A**யும் **B**யும் சரியாகும் அதேவேளை **B** யினூடாக **A** விபரிக்கப்படவில்லை. (.....)

20. நிறுவனக் கட்டமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு விசாலம் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பினைச் சரியாக எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

	நிறுவனக் கட்டமைப்பு	கட்டுப்பாட்டு விசாலம்
(1)	உயரமான போது	விசாலமானதாகும்
(2)	உயரமான போது	குறுகியதாகும்
(3)	உயரமான போது	மாற்றமில்லாததாகும்
(4)	தட்டையான போது	மாற்றமில்லாததாகும்
(5)	தட்டையான போது	குறுகியதாகும்

(.....)

21. நிகழ்நிலை வங்கியியலினூடாகப் பெற்றுக்கொள்ள முடியாத சேவை ஒன்றாவது

(1) கணக்கொன்றினை ஆரம்பித்தல் (2) பட்டியற் கொடுப்பனவுகள்
(3) நிதிகளை மாற்றுதல் (4) பணத்தை மீளப்பெறுதல்
(5) கணக்கு மீதிகளை சரி பார்த்தல் (.....)

22. கம்பனி ஒன்றின் விலைவு விகிதம் 0.5 ஆகவும் நடைமுறை விகிதம் 1.7 ஆகவும் இருக்குமாயின் நடைமுறைச் சொத்துக்கள் அதிகளவில் கொண்டிருப்பது

(1) கையிலுள்ள காசு (2) முற்செலுத்திய செலவுகள் (3) கடன்பட்டோர்
(4) வங்கி மீதி (5) சரக்கிருப்பு (.....)

23. பின்வரும் அட்டவணையில் நுகர்வோர் தொடர்புடைய சில சொற்பதங்களும் அவற்றுக்குப் பொருத்தமான விபரங்களும் தரப்பட்டுள்ளன.

சொற்பதங்கள்	விபரங்கள்
(i) நிருப்தி	A - உற்பத்திப்பொருளொன்றின் மொத்த மதிப்பீடு
(ii) விசுவாசம்	B - பொருட்களும் சேவைகளும்
(iii) பெறுமதி	C - உணர்ச்சிவயத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்
(iv) வழங்கல்	D - எதிர்பார்ப்புகளை நிறைவேற்றல் அல்லது மேலதிகமாக வழங்குதல்
(v) கவனம்	E - மீள்கொள்வனவுக்கான விருப்பம்

மேலே தரப்பட்டுள்ள சொற்பதங்களின் ஒழுங்கிற்கு அமைவாக அதற்குப் பொருந்துகின்ற விபரங்களை சரியாகக் கொண்டுள்ள தெரிவு யாது?

(1) B, E, A, C, D (2) B, E, A, D, C (3) C, E, A, D, B
(4) D, A, E, B, C (5) D, E, A, B, C (.....)

24. விளம்பரப்படுத்தல் மற்றும் பிரசித்தப்படுத்தலின் குணாம்சங்கள் சில பின்வருமாறு.

A - ஒரு வழித் தொடர்பாடல் B - ஆள்சாராதது
C - அதிகளவான கிரயம் D - விசேட அனுசரணையாளர்
E - பேரளவிலான பார்வையாளர்கள் F - கட்டுப்படுத்தக்கூடியது

மேலே தரப்பட்டுள்ளவற்றுள், விளம்பரப்படுத்தலின் குணாம்சங்களை மாத்திரம் கொண்டுள்ள தெரிவு யாது?

(1) A, D, E (2) B, D, F (3) B, E, F (4) C, D, F (5) C, E, D (.....)

[பக். 5 ஐப் பார்க்க

25. இணைப்பு விகிதத்துடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) கடன் தீர்க்கும் தன்மையை கண்டறியும் ஆற்றல்
(2) செயற்பாட்டு வினைத்திறனை அளவிடும் ஆற்றல்
(3) குறுங்கால கொடுப்பனவுகளை நிறைவேற்றும் ஆற்றல்
(4) நீதி இடர்களை இனங்காணக்கூடிய ஆற்றல்
(5) பங்கொன்றிற்கான உழைப்பை எதிர்வு கூறக்கூடிய ஆற்றல் (.....)

26. மீழே தரப்பட்டுள்ள இடைநிலையாளர்களுள் உற்பத்திப்பொருட்களின் உரிமையுடன் விநியோக செயன்முறையில் ஈடுபடக்கூடிய தரப்பினர்
(1) தரகு முகவர் (2) மொத்த விற்பனையாளர் (3) தரகர்
(4) காரணிகர் (5) ஏல விற்பனையாளர் (.....)

27. பின்வரும் அட்டவணையானது ஊழியர்களைத் தெரிவுசெய்வதற்கான சில பரீட்சைகளையும் அவற்றின் நோக்கங்களையும் எடுத்துக் காட்டுகின்றன.

தெரிவுசெய்தல் பரீட்சை	நோக்கம்
(i) உடலியல் ஆற்றல்	A- மனஅழுத்தத்தின் கீழ் வேலைசெய்யக்கூடிய ஆற்றலை அளவிடுவதற்கு
(ii) புத்திக்கூர்மை (IQ)	B- சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய தனிநபர் ஆற்றலை அளவிடுவதற்கு
(iii) ஆளுமை	C- பலத்தினையும் சகிப்புத் தன்மையையும் அளவிடுவதற்கு
(iv) பின்புலம்	D- விசேட பணியினை நிறைவேற்றக்கூடிய ஆற்றலை அளவிடுவதற்கு
(v) செய்முறை	E- முறைசார்ந்த பதிவுகளினூடாக தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு

மேலே தரப்பட்டுள்ள தெரிவுசெய்தல் பரீட்சைகளின் ஒழுங்கிற்கு அமைவாக அவற்றுடன் தொடர்புடைய நோக்கங்களை சரியாகக் கொண்டுள்ள தெரிவு யாது?
(1) B, C, A, E, D (2) C, B, A, E, D (3) C, B, E, A, D
(4) D, C, A, E, B (5) D, C, B, A, E (.....)

28. ஊழியர் அறிவிருத்தி நிகழ்ச்சித திட்டங்கள் கரிசனை செலுத்த வேண்டியது
(1) வேலையை நிறைவேற்றுவது தொடர்பில் சரியான அறிவு மற்றும் திறன்களை பெற்றுக்கொடுப்பதற்கு ஆகும்.
(2) தற்போதைய வேலை தொடர்பிலான திறன் இடைவெளியைக் குறைப்பதற்கு ஆகும்.
(3) நிறுவனத்தின் கற்றல் கலாசாரத்தை மேம்படுத்துவதற்கு ஆகும்.
(4) நிறுவனத்தில காணப்படும் தற்போதைய தொழினுட்பத்தினை பயன்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஆகும்.
(5) எதிர்காலத்தில் பொறுப்புகளைக் கையேற்பதற்காகத் தயார்படுத்துவதற்கு ஆகும். (.....)

29. இலங்கையர் ஒருவர் தன்னுடைய மொத்தக் கடன்பொறுப்பு தொடர்பில் அறிக்கை ஒன்றினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பது
(1) இலங்கை மத்திய வங்கியினூடாக ஆகும்.
(2) கடன் இணக்க சபைத் தினைக்களத்தினூடாக ஆகும்.
(3) இலங்கை ஏற்றுமதி கடனுதவி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினூடாக ஆகும்.
(4) இலங்கை கடன் தகவல் பணியகத்தினூடாக ஆகும்.
(5) அரசாங்க தகவல் தினைக்களத்தினூடாக ஆகும். (.....)

30. பின்வரும் அட்டவணையில் சில தகவல் முறைமைகளும் அவற்றின் பிரயோகங்களும் தரப்பட்டுள்ளன.

தகவல் முறைமைகள்	பிரயோகங்கள்
(i) கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமைகள்	A- வணிக மாதிரிகளை உருவாக்குதல்
(ii) அலுவலக தன்னியக்க முறைமைகள்	B- வாடிக்கையாளர் உறவுமுறை முகாமைத்துவம்
(iii) அறிவுப் பணி முறைமைகள்	C- சரக்கிருப்பை முகாமை செய்தல்
(iv) முகாமைத்துவ தகவல் முறைமைகள்	D- வணிக எதிர்வுகூறல்
(v) நிறைவேற்று உதவி முறைமைகள்	E- மின்னஞ்சல் தொடர்பாடல்

மேலே தரப்பட்டுள்ள தகவல் முறைமைகளின் ஒழுங்கிற்கு அமைவாக அவற்றுடன் தொடர்புடைய பிரயோகங்களை சரியாக எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) B, C, E, D, A (2) C, E, A, B, D (3) C, E, A, D, B
(4) D, E, A, B, C (5) D, E, A, C, B (.....)

[பக். 6 ஐப் பார்க்க

• **31** தொடக்கம் **40** வரையிலான வினாக்களுக்கு விடையெழுதும்போது பொருத்தமான சொல் / சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.

31. (அ) ஒரு நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியானது ..... சமூகம் மற்றும் ..... ஆகியவற்றின் ஒருங்கிணைவாகும்.

(ஆ) நிறுவனமொன்று நாட்டின் சட்டங்களையும் பிரமாணங்களையும் மதித்து நடப்பது ..... பொறுப்பாகும் அதேவேளை சமூக நலனைக் கருத்திற்கொண்டு நிறுவனம் ஒன்று மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ..... பொறுப்பு ஆகும்.

32. (அ) உரிமம் பெற்ற வணிக வங்கிகளின் வைப்புப் பொறுப்பு விகிதாசாரம் சட்டரீதியான ..... தேவைப்பாடு ஆவதுடன், அவை இலங்கை மத்திய வங்கியில் ..... வைப்பைப் பேணுதல் வேண்டும்.

(ஆ) இலங்கை அரச சட்டங்களினூடாக ..... கொள்கை உருவாக்கப்படும் அதேவேளை மத்திய வங்கியானது ..... கொள்கையை உருவாக்கும்.

33. (அ) வணிகமொன்றின் சகல நடவடிக்கைகளுக்கும் வழிகாட்டுவதாக ..... கூற்று அமையும் அதேவேளை வணிகம் ஒன்றை நடாத்துவதன் காரணத்தைப் பிரதிபலிப்பது ..... கூற்று ஆகும்.

(ஆ) உற்பத்தி நிறுவனமொன்றின் இயந்திரப் பாவனைக்கு முந்திய பரிசோதனை ..... கட்டுப்பாடு ஆகும் அதேவேளை உற்பத்திச் செயன்முறையின்போது தரக் கட்டுப்பாட்டைப் பேணுவது ..... கட்டுப்பாடு ஆகும்.

34. (அ) முகபாவனையானது ..... தொடர்பாடலுக்கு உதாரணமொன்றாகும் அதேவேளை நேருக்கு நேரான உரையாடல் ..... தொடர்பாடலுக்கு உதாரணமாகும்.

(ஆ) அக இணையமானது (Intranet) அடிப்படையில் நிறுவனத்தினுள் ..... தரவு தொடர்பாடல் நோக்கங்கள் தொடர்பில் வடிவமைக்கப்பட்டிருக்கும் அதேவேளை புற இணையமானது (Extranet) வலையமைப்பு வசதிகளை விசேடமாக ..... தரத்தவருக்கு விரிவுபடுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதாகும்.

35. (அ) ABC பகுப்பாய்வானது ..... முகாமை தொடர்பில் பயன்படுத்தப்படும் அதேவேளை ..... பகுப்பாய்வானது மொத்தக் கிரயம் மற்றும் மொத்த வருமான சமநிலைப் புள்ளியைத் தீர்மானித்துக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

(ஆ) உற்பத்திப்பொருள் எண்ணக்கருவானது ..... நோக்கியதாகக் காணப்படும் அதேவேளை ..... எண்ணக்கருவானது வாடிக்கையாளரை நோக்கியதாகக் காணப்படுகின்றது.

36. (அ) தனிப்பட்ட பாவனை தொடர்பில் நபர்கள் பொருட்களைக் கொள்வனவு செய்யும் இடம் ..... சந்தை என அழைக்கப்படும் அதேவேளை B2B கொடுக்கல்வாங்கல்கள் நிகழும் இடம் ..... சந்தை என அழைக்கப்படும்.

(ஆ) புத்தாக்கத்திற்கான உற்பத்தி, பாவனை மற்றும் விற்பனை தொடர்பில் புத்தாக்குனர்களுக்கு விசேட உரிமையைப் பெற்றுக்கொடுப்பது ..... ஆகும் அதேவேளை குறித்த உற்பத்திப்பொருள் ஒன்றை அடையாளம் காண்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ளப்படும் விசேடமான குறியீடு அல்லது சொல் ..... ஆகும்.

37. (அ) வணிகம் ஒன்று செல்ல வேண்டிய வழியினை பிரதிநிதித்துவப்படுத்துவது ..... திட்டம் ஆகும் அதேவேளை அதன் அடிப்படை உள்ளடக்கத்தை எடுத்துக்காட்டுவது ..... சுருக்கம் ஆகும்.

(ஆ) தொடர்பாடல், குழுவாக வேலை செய்தல் மற்றும் தலைமை வகிப்பதற்கான முகாமையாளர் ஒருவரின் ஆற்றல் என்பன ..... திறன் ஆகும் அதேவேளை உபகரணங்கள் மற்றும் முறைகளின் பாவனைகள் தொடர்பிலான ஆற்றல் ..... திறன் ஆகும்.

38. (அ) சாதாரண பங்குதாரர் நிதி ரீதியாக நட்டத்தினை அடைவதற்கான நிகழ்தகவு ..... ஆகும் அதேவேளை அவரது பங்கு முதலீட்டிற்காக கம்பனியால் ஒதுக்கப்படும் இலாபமானது ..... என அழைக்கப்படும்.

(ஆ) இரு கம்பனிகள் ஓர் நிறுவனமாக மாற்றமடைவது ..... ஆகும் அதேவேளை ஒரு கம்பனி வேறொரு கம்பனியைக் கொள்வனவு செய்வது ..... என அழைக்கப்படும்.

[பக். 7 ஐப் பார்க்க

39. (அ) கம்பனி ஒன்றினால் இலத்திரனியல் வர்த்தக சேவைகளை வெளிமூலங்களில் இருந்து பெற்றுக்கொள்ளுதல் ..... தரப்பு ஏற்பாட்டியல் என அழைக்கப்படும் அதேவேளை வாடிக்கையாளரினால் விற்பனையாளருக்கு மீண்டும் பொருட்கள் திருப்பி அனுப்புதல் ..... ஏற்பாட்டியல் என அழைக்கப்படும்.

(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்றொன்றில் நடைமுறையல்லாத சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் ..... நடவடிக்கைகளுக்கு உதாரணமாகும் அதேவேளை சாதாரண பங்குகளை வழங்குதல் ..... நடவடிக்கைகளுக்கு உதாரணமாகும்.

40. (அ) அளவு, வேகம் மற்றும் வித்தியாசம் என்பவை ..... இன் பிரதான குணாம்சங்கள் ஆகும் அதேவேளை வணிகம் அமைந்திருக்கும் இடத்தினைச் சென்றடைவதற்கான வழிச்செலுத்தல் முறைமையைக் (Navigation system) காட்டுவது ..... இட முறைமை என அழைக்கப்படும்.

(ஆ) உற்பத்திச் செயன்முறையின் ஒழுங்கமைவிற்கு அமைவாக வேலைத்தளங்களை ஒழுங்குபடுத்துவது ..... தள அமைப்பு ஆகும் அதேவேளை உற்பத்திச் செயன்முறையின் ஒழுங்கமைவினைக் கவனத்திற் கொள்ளாது வேலைத்தளங்களை ஒழுங்கமைப்பது ..... தள அமைப்பு ஆகும்.

- **41** தொடக்கம் **50** வரையான வினாக்களுக்குப் **பொருத்தமான விடையை** தரப்பட்ட வெற்றிடங்களில் எழுதுக.

41. சமூக முயற்சியாண்மையின் குணாம்சங்கள் **நான்கினை** எழுதுக.

(1) .....

(2) .....

(3) .....

(4) .....

42. வணிக நிறுவனமொன்று சர்வதேச சந்தையினுள் நுழைவதற்கு பயன்படுத்திக்கொள்ளும் முறைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(1) .....

(2) .....

(3) .....

(4) .....

43. வணிகத் திட்டமொன்றைத் தயாரிக்கும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய பிரதான காரணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(1) .....

(2) .....

(3) .....

(4) .....

44. பிலிப் கொட்லர் அவர்களின் வாடிக்கையாளர் பெறுமதி சீரவரிசைக்கு அமைவாக உற்பத்திப்பொருளொன்றின் மட்டங்கள் **நான்கினை** எழுதுக.

(1) .....

(2) .....

(3) .....

(4) .....

45. சிக்கனக் கட்டளைத் தொகையின் (EOQ) அலுகூலங்கள் **நான்கினை** எழுதுக.

(1) .....

(2) .....

(3) .....

(4) .....

[பக். 8 ஐப் பார்க்க

46. கீழே தரப்பட்டுள்ள முகாமைத்துவ முறைமைகள் ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய சர்வதேச தர நிர்ணயக்கத்தின (ISO) சரியான இலக்கத்தினை எழுதுக.

(1) தரம் (Quality) : ISO .....

(2) சூழல் : ISO .....

(3) உணவுப் பாதுகாப்பு : ISO .....

(4) தொழில்சார் சுகாதாரமும் பாதுகாப்பும் : ISO .....

47. சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் முதலீட்டாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(1) .....

(2) .....

(3) .....

(4) .....

48. சர்வதேச வியாபாரத்தின் பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தப்படுகின்ற ஆவணங்களின் சரியான பெயரினை எழுதுக.

சந்தர்ப்பம்	ஆவணம்
(1) இறக்குமதி செய்யப்பட்ட புதிய பழங்களில் பூச்சிகள் இல்லை என்பதனை சான்றுப்படுத்தல்	.....
(2) இறக்குமதியாளரானவர் ஏற்றுமதியாளருக்கு செலுத்த வேண்டிய பணத்தினை தான் கொடுப்பனவு செய்வதாக வங்கி உறுதியளித்தல்	.....
(3) விற்பனையை உறுதி செய்வதற்கு முன்னர் முதன்மை விலைமனுவை இறக்குமதியாளருக்கு அனுப்புதல்	.....
(4) ஏற்றுமதிக்கான பண்டம் உற்பத்தி செய்யப்பட்ட நாட்டினை உறுதிப்படுத்துதல்	.....

49. கீழே தரப்பட்டுள்ள உருப்படிகள் ஒவ்வொன்றும் கணினியமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமை ஒன்றின் எப் பாகத்துடன் தொடர்புடையது என்பதனைப் பெயரிடுக.

(1) ஒளியியல் சுட்டி (Optical Mouse) : .....

(2) மென்பொருள் பொறியியலாளர் (Software Engineer) : .....

(3) MS office : .....

(4) நுண் அட்டை (Microchip) : .....


50. பின்வரும் வரைபடத்தில் (ii), (iv), (vi) மற்றும் (viii) ஆகிய இடைவெளிகளில் நிறுவனமொன்றின் ஊழியர்களைக் கவர்தல் மற்றும் தெரிவுசெய்தல் செயன்முறையில் உள்ளடங்கக்கூடிய படிமுறைகளை சரியாகக் குறிப்பிடுக.

(1) (ii) - .....

(2) (iv) - .....

(3) (vi) - .....

(4) (viii) - .....



* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2023 (2024)

ඉය අංකය
ட இலக்கம் | 32 | විෂයය
பாடம் | வணிகக் கல்வி

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය /பத்திரம் I

ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.
01.	5	11.	3	21.	4
02.	4	12.	1	22.	5
03.	5	13.	4	23.	5
04.	2	14.	3	24.	4
05.	3	15.	2	25.	1
06.	2	16.	4	26.	2
07.	3	17.	5	27.	2
08.	3	18.	3	28.	5
09.	5	19.	1	29.	4
10.	1	20.	2	30.	2

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 2 x 30 = 60

• 31 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு விடையெழுதும்போது பொருத்தமான சொல் / சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.

31. (அ) ஒரு நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியானது ....., சமூகம் மற்றும் ..... ஆகியவற்றின் ஒருங்கிணைவாகும்.

(ஆ) நிறுவனமொன்று நாட்டின் சட்டங்களையும் பிரமாணங்களையும் மதித்து நடப்பது ..... பொறுப்பாகும் அதேவேளை சமூக நலனைக் கருத்திற்கொண்டு நிறுவனம் ஒன்று மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ..... பொறுப்பு ஆகும்.

அ) சூழல் / பூமி (Planet), பொருளாதாரம் / இலாபம் (Profit)

(ஒழுங்கு அவசியமில்லை – 2 X ½ = 1 புள்ளி)

ஆ) சட்டப், சமூகப் (ஒழுங்கு அவசியம் –2 X ½ = 1 புள்ளி)

32. (அ) உரிமம் பெற்ற வணிக வங்கிகளின் வைப்புப் பொறுப்பு விகிதாசாரம் சட்டரீதியான ..... தேவைப்பாடு ஆவதுடன், அவை இலங்கை மத்திய வங்கியில் ..... வைப்பைப் பேணுதல் வேண்டும்.

(ஆ) இலங்கை அரச சட்டங்களினூடாக ..... கொள்கை உருவாக்கப்படும் அதேவேளை மத்திய வங்கியானது ..... கொள்கையை உருவாக்கும்.

அ) ஒதுக்கத், காசு /අනුරූපය

(ஒழுங்கு அவசியம் –2 X ½ = 1 புள்ளி)

ஆ) இறைக் / பாதீட்டுக், நாணயக்

(ஒழுங்கு அவசியம் –2 X ½ = 1 புள்ளி)

33. (அ) வணிகமொன்றின் சகல நடவடிக்கைகளுக்கும் வழிகாட்டுவதாக ..... கூற்று அமையும் அதேவேளை வணிகம் ஒன்றை நடாத்துவதன் காரணத்தைப் பிரதிபலிப்பது ..... கூற்று ஆகும்.

(ஆ) உற்பத்தி நிறுவனமொன்றின் இயந்திரப் பாவனைக்கு முந்திய பரிசோதனை ..... கட்டுப்பாடு ஆகும் அதேவேளை உற்பத்திச் செயன்முறையின்போது தரக் கட்டுப்பாட்டைப் பேணுதல் ..... கட்டுப்பாடு ஆகும்.

அ) தூரநோக்கு, இலட்சிய நோக்கு

(ஒழுங்கு அவசியம் –2 X ½ = 1 புள்ளி)

ஆ) முன்நோக்கிய, நடைமுறைக்

(ஒழுங்கு அவசியம் –2 X ½ = 1 புள்ளி)

34. (அ) முகபாவனையானது ..... தொடர்பாடலுக்கு உதாரணமொன்றாகும் அதேவேளை நேருக்கு நேரான உரையாடல் ..... தொடர்பாடலுக்கு உதாரணமாகும்.

(ஆ) அக இணையமானது (Intranet) அடிப்படையில் நிறுவனத்தினுள் ..... தரப்படும் தொடர்பாடல் நோக்கங்கள் தொடர்பில் வடிவமைக்கப்பட்டிருக்கும் அதேவேளை புற இணையமானது (Extranet) வலையமைப்பு வசதிகளை விசேடமாக ..... தரத்தவருக்கு விரிவுபடுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதாகும்.

அ) சமிக்ஞை / සංඥා/ வாய் மொழி மூலமல்லாத, வாய் மொழி மூலமான

(ஒழுங்கு அவசியம் –2 X ½ = 1 புள்ளி)

ஆ) உள்ளக, வெளியக

(ஒழுங்கு அவசியம் –2 X ½ = 1 புள்ளி)

35. (அ) ABC பகுப்பாய்வானது ..... முகாமை தொடர்பில் பயன்படுத்தப்படும் அதேவேளை ..... பகுப்பாய்வானது மொத்தக் கிரயம் மற்றும் மொத்த வருமான சமநிலைப் புள்ளியைத் தீர்மானித்துக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

(ஆ) உற்பத்திப்பொருள் எண்ணக்கருவானது ..... நோக்கியதாகக் காணப்படும் அதேவேளை ..... எண்ணக்கருவானது வாடிக்கையாளரை நோக்கியதாகக் காணப்படுகின்றது.

1 மதிப்பு. BEP

அ) சரக்கிருப்பு, சமப்பாட்டுப் புள்ளி / இலாப நட்டமற்ற புள்ளி/ (ஒழுங்கு அவசியம் – 2 X ½ = 1 புள்ளி)

ஆ) விற்பனையாளர்/ சந்தைப்படுத்தல் (ஒழுங்கு அவசியம் –2 X ½ = 1 புள்ளி)

36. (அ) தனிப்பட்ட பாவனை தொடர்பில் நபர்கள் பொருட்களைக் கொள்வனவு செய்யும் இடம் ..... சந்தை என அழைக்கப்படும் அதேவேளை B2B கொடுக்கல்வாங்கல்கள் நிகழும் இடம் ..... சந்தை என அழைக்கப்படும்.

(ஆ) புத்தாக்கத்திற்கான உற்பத்தி, பாவனை மற்றும் விற்பனை தொடர்பில் புத்தாக்குனர்களுக்கு விசேட உரிமையைப் பெற்றுக்கொடுப்பது ..... ஆகும் அதேவேளை குறித்த உற்பத்திப்பொருள் ஒன்றை அடையாளம் காண்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ளப்படும் விசேடமான குறியீடு அல்லது சொல் ..... ஆகும்.

அ) நுகர்வோர், கைத்தொழில் (ஒழுங்கு அவசியம் –2 X ½ = 1 புள்ளி)

ஆ) ஆக்கவுரிமை, பண்டக்குறி (ஒழுங்கு அவசியம் –2 X ½ = 1 புள்ளி)

37. (அ) வணிகம் ஒன்று செல்ல வேண்டிய வழியினை பிரதிநிதித்துவப்படுத்துவது ..... திட்டம் ஆகும் அதேவேளை அதன் அடிப்படை உள்ளடக்கத்தை எடுத்துக்காட்டுவது ..... சுருக்கம் ஆகும்.

(ஆ) தொடர்பாடல், குழுவாக வேலை செய்தல் மற்றும் தலைமை வகிப்பதற்கான முகாமையாளர் ஒருவரின் ஆற்றல் என்பன ..... திறன் ஆகும் அதேவேளை உபகரணங்கள் மற்றும் முறைகளின் பாவனைகள் தொடர்பிலான ஆற்றல் ..... திறன் ஆகும்.

அ) வணிகத், நிறைவேற்றுனைச் (ஒழுங்கு அவசியம் –2 X ½ = 1 புள்ளி)

ஆ) மானிடத், தொழினுட்பத் (ஒழுங்கு அவசியம் –2 X ½ = 1 புள்ளி)

38. (அ) சாதாரண பங்குதாரர் நிதி ரீதியாக நட்டத்தினை அடைவதற்கான நிகழ்தகவு ..... ஆகும் அதேவேளை அவரது பங்கு முதலீட்டிற்காக கம்பனியால் ஒதுக்கப்படும் இலாபமானது ..... என அழைக்கப்படும்.

(ஆ) இரு கம்பனிகள் ஓர் நிறுவனமாக மாற்றமடைவது ..... ஆகும் அதேவேளை ஒரு கம்பனி வேறொரு கம்பனியைக் கொள்வனவு செய்வது ..... என அழைக்கப்படும்.

அ) இடர், பங்கிலாபம் (ஒழுங்கு அவசியம் –2 X ½ = 1 புள்ளி)

ஆ) ஒன்றிணைதல், கையகப்படுத்தல் (ஒழுங்கு அவசியம் – 2 X ½ = 1 புள்ளி)

39. (அ) கம்பனி ஒன்றினால் இலத்திரனியல் வர்த்தக சேவைகளை வெளிமூலங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் ..... தரப்பு ஏற்பாட்டியல் என அழைக்கப்படும் அதேவேளை வாடிக்கையாளரினால் விற்பனையாளருக்கு மீண்டும் பொருட்கள் திருப்பி அனுப்புதல் ..... ஏற்பாட்டியல் என அழைக்கப்படும்.

(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்றொன்றில் நடைமுறையல்லாத சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் ..... நடவடிக்கைகளுக்கு உதாரணமாகும் அதேவேளை சாதாரண பங்குகளை வழங்குதல் ..... நடவடிக்கைகளுக்கு உதாரணமாகும்.

அ) மூன்றாந் (3PL), நேர்மாற்று (ஒழுங்கு அவசியம் $-2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

ஆ) முதலீட்டு, நிதி (ஒழுங்கு அவசியம் $-2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

40. (அ) அளவு, வேகம் மற்றும் வித்தியாசம் என்பவை ..... இன் பிரதான குணாம்சங்கள் ஆகும் அதேவேளை வணிகம் அமைந்திருக்கும் இடத்தினைச் சென்றடைவதற்கான வழிச்செலுத்தல் முறைமையைக் (Navigation system) காட்டுவது ..... இட முறைமை என அழைக்கப்படும்.

(ஆ) உற்பத்திச் செயன்முறையின் ஒழுங்கமைவிற்கு அமைவாக வேலைத்தளங்களை ஒழுங்குபடுத்துவது ..... தள அமைப்பு ஆகும் அதேவேளை உற்பத்திச் செயன்முறையின் ஒழுங்கமைவினைக் கவனத்திற் கொள்ளாது வேலைத்தளங்களை ஒழுங்கமைப்பது ..... தள அமைப்பு ஆகும்.

அ) பாரிய தரவு / பெருந் தரவு, பூகோள GPS (ஒழுங்கு அவசியம் $-2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

ஆ) உற்பத்திப்பொருள், செயன்முறை Product Process (ஒழுங்கு அவசியம் $-2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

41. சமூக முயற்சியாண்மையின் குணாம்சங்கள் நான்கினை எழுதுக.

1. ஆக்கத்திறன்
2. புத்தாக்கம் புனைதல்
3. சமூக விழிப்புணர்வு
4. ஒத்துணர்தல் / மற்றையோர் நிலைக்கு உள்ளாகுதல் (Empathy)
5. தூரநோக்குடைய தன்மை
6. உள்வாங்குதல் (Adaptability) /
7. வெளிப்படைத்தன்மை
8. சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
9. சவால்களில் இருந்து மீண்டு வரக்கூடிய திறன் (Resilience)
10. கூழல் நேயத்தன்மை

(4 X ½ = 2 புள்ளிகள்)

42. வணிக நிறுவனமொன்று சர்வதேச சந்தையினுள் நுழைவதற்கு பயன்படுத்திக் கொள்ளும் முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. ஏற்றுமதி மூலம்
2. அனுமதிப்பத்திரம் (உரிமம்) பெறல் மூலம்
3. அங்கீகார வணிகம் மூலம்
4. வியாபாரக் கூட்டுக்கள், கூட்டு முயற்சிகள் மூலம் (Alliance)
5. வெளிநாட்டு நேரடி முதலீடு மூலம் (FDI)
6. கையகப்படுத்தல் மூலம்
7. வெளிநாட்டுக் கிளைகளை உருவாக்குவதன் மூலம்
8. ஆயத்த தயாரிப்புத் திட்டங்கள் மூலம் (Turnkey Projects)
9. முகாமைத்துவ ஒப்பந்தங்கள் மூலம்

(4 X ½ = 2 புள்ளிகள்)

3. வணிகத் திட்டமொன்றைத் தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய பிரதான காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. குவிமையப்படுத்தல்
2. வாடிக்கையாளர்
3. இலக்கு
4. தேவையான நிதி வளங்கள்

(4 x ½ = 2 புள்ளிகள்)

4. பிலிப் கொட்லர் அவர்களின் வாடிக்கையாளர் பெறுமதி சீர்வரிசைக்கு அமைவாக உற்பத்திப் பொருளொன்றின் மட்டங்கள் நான்கினை எழுதுக.

1. மைய நலன்
2. அடிப்படை உற்பத்திப்பொருள்
3. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்திப்பொருள்
4. விருத்தியாக்கப்பட்ட உற்பத்திப்பொருள்
5. எதிர்கால / சாத்திய உற்பத்திப்பொருள்

(4 x ½ = 2 புள்ளிகள்)

5. சிக்கனக் கட்டளைத் தொகையின் (EOQ) அனுகூலங்கள் நான்கினை எழுதுக.

1. வினைத்திறன் அதிகரித்தல்
2. சரக்கிருப்பு மட்டங்கள் உத்தம நிலையில் காணப்படல்
3. கட்டளைக் கிரயங்களைக் குறைக்க முடிதல்
4. களஞ்சியப்படுத்தற் கிரயங்களைக் குறைக்க முடிதல்.
5. அதிகளவு தொகையாகக் கட்டளையிடும் போது கழிவுகளைப் பெறமுடிதல்
6. விரயத்தைக் குறைக்க முடிதல்
7. சரக்கிருப்பற்ற நிலையைக் குறைக்க முடிதல்
8. செயற்பாட்டு நடவடிக்கைகள் முன்னேற்றமடைதல்

(4 x ½ = 2 புள்ளிகள்)

6. கீழே தரப்பட்டுள்ள முகாமைத்துவ முறைமைகள் ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய சர்வதேச தர நிறுவகத்தின் (ISO) சரியான இலக்கத்தினை எழுதுக.

(1) தரம் (Quality) : ISO .....
(2) சூழல் : ISO .....
(3) உணவுப் பாதுகாப்பு : ISO .....
(4) தொழில்சார் சுகாதாரமும் பாதுகாப்பும் : ISO .....

1. ISO 9001
2. ISO 14001
3. ISO 22000
4. ISO 45001

(4 x ½ = 2 புள்ளிகள்)

7. சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் முதலீட்டாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

1. பங்கிலாபம் பெறமுடிதல்
2. முகாமையில் பங்குபற்ற முடிதல்
3. வாக்களிக்கும் உரிமையை பெறமுடிதல்
4. பிணையாக வைத்து கடன் பெறமுடிதல்
5. அதிகளவான திரவத்தன்மை காணப்படல்.
6. உரித்து வழங்கல் அனுகூலங்கள்
7. உபகார வழங்கல்/அனுகூலங்கள்
8. மூலதன ஆதாய அனுகூலங்கள்

(4 x ½ = 2 புள்ளிகள்)

48. சர்வதேச வியாபாரத்தின் பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாவன்படுத்தப்படுகின்ற ஆவணங்களின் சரியான பெயரினை எழுதுக.

சந்தர்ப்பம்	ஆவணம்
(1) இறக்குமதி செய்யப்பட்ட புதிய பழங்களில் பூச்சிகள் இல்லை என்பதனை சான்றுப்படுத்தல்	.....
(2) இறக்குமதியாளரானவர் ஏற்றுமதியாளருக்கு செலுத்த வேண்டிய பணத்தினை தான் கொடுப்பனவு செய்வதாக வங்கி உறுதியளித்தல்	.....
(3) விற்பனையை உறுதி செய்வதற்கு முன்னர் முதன்மை விலைமனுவை இறக்குமதியாளருக்கு அனுப்புதல்	.....
(4) ஏற்றுமதிக்கான பண்டம் உற்பத்தி செய்யப்பட்ட நாட்டினை உறுதிப்படுத்துதல்	.....

1) சுகநலச் சான்றிதழ் (Quarantine Certificate / Sanitary Certificate / Health Certificate)

2) நாணயக் கடிதம்

3) மாதிரி விலைப்பட்டியல் (Proforma Invoice)

4) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்

(4 X ½ = 2 புள்ளிகள்)

49. கீழே தரப்பட்டுள்ள உருப்படிகள் ஒவ்வொன்றும் கணினிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமை ஒன்றின் வ பாகத்துடன் தொடர்புடையது என்பதனைப் பெயரிடுக.

(1) ஒளியியல் சுட்டி (Optical Mouse) : .....

(2) மென்பொருள் பொறியியலாளர் (Software Engineer) : .....

(3) MS office : .....

(4) நுண் அட்டை (Microchip) : .....

1) வன்பாகம் (Hardware)

2) உயிர்ப்பாகம் (Liveware)

3) மென்பாகம் (Software)

4) நிலைபொருள் பாகம் (Firmware)

(4 X ½ = 2 புள்ளிகள்)


D. பின்வரும் வரைபடத்தில் (ii),(iv),(vi) மற்றும் (viii) ஆகிய இடைவெளிகளில் நிறுவனமொன்றின் ஊழியர்களைக் கவர்தல் மற்றும் தெரிவுசெய்தல் செயன்முறையில் உள்ளடங்கக்கூடிய படிமுறைகளை சரியாகக் குறிப்பிடுக.

(1) (ii) - .....

(2) (iv) - .....

(3) (vi) - .....

(4) (viii) - .....



1) வேலை பகுப்பாய்வு

2) வேலை குறித்துரைப்பு

3) விண்ணப்பங்களை மதிப்பிடலும், பொருத்தமான விண்ணப்பங்களைப் பட்டியலிடலும்

4) நியமனம் செய்தலும் இணைத்துக் கொள்ளலும்

(4 x ½ = 2 புள்ளிகள்)

பகுதி I

[සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

வ්‍යාපාර අධ්‍යයනය II வணிகக் கல்வி II Business Studies II	32	T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

* ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி I

1. ஆதியா தனது யோகட் தயாரிக்கும் வணிகத்தை 'சுவை யோகட்' எனும் பெயரில் பதிவுசெய்து அரு வங்கி ஒன்றிடம் இருந்து பெற்றுக்கொண்ட கடனைக் கொண்டு நடாத்திச் செல்கின்றார். அவர் தனது வணி நடவடிக்கைகளை சமூகப் பொறுப்பினை நிறைவேற்றுவதனூடாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றார் ஆதியா ஐந்து ஊழியர்களைத் தனது வணிகத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்துள்ளார். தற்போது அவர் தனது தயாரிப்பிற்கு பெறுமதி சேர்த்தலுக்கான புதிய வழிவகைகளைத் தேடியறிந்து கொண்டிருக்கின்றார்.

(i) (அ) பின்வரும் ஒவ்வொரு அடிப்படைகளுக்கும் அமைவாக இவ்வணிகம் வகைப்படுத்தப்படும் விதத்தினைக் குறிப்பிடுக.

(1) உற்பத்திப்பொருளின் தன்மை (01 புள்ளி)

(2) நோக்கம் (01 புள்ளி)

(ஆ) வணிகத்திற்கு வங்கிக் கடனைப் பெற்றுக் கொண்டதனால் ஆதியாவிற்கு கிடைக்கக்கூடிய நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

i. அ) 1. இரண்டாம் நிலை (1 புள்ளி)

2. இலாப நோக்கமுடையது (1 புள்ளி)

ஆ) 1. ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட வட்டியை மட்டும் செலுத்துதல் வேண்டும்.

2. வரிச் சலுகை / அல்லது வரி விடுதலை கிடைக்கப் பெறல்.

3. தயாரித்த வணிகத் திட்டத்தின் அடிப்படையில் நிறுவனத்தை ஒழுங்குப்படுத்தலாம்.

4. வருமானத்தை ஈட்டிக் கொண்டே கடனைத் திருப்பிச் செலுத்த முடிதல்.

5. கடனை மீளச் செலுத்தும் காலம் தொடர்பாக கலந்தாலோசிக்க முடிதல்.

6. வட்டி குறைவடைதல்

7. வெளிநபர்களிடையே நம்பிக்கையை கட்டியெழுப்ப முடிதல்.

(½ x 4 = 2 புள்ளிகள்)

(ii) (அ) 'பெறுமதி சேர்த்தல்' என்பதனை விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்திப்பொருளுக்கு பெறுமதி சேர்ப்பதன் மூலம் ஆதியா பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii. அ) உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகளின் கிரயத்திற்கும் முடிவுப் பொருட்களின் விற்பனை விலை அல்லது உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு ஆகும். (2 புள்ளிகள்)

ஆ) 1. உற்பத்திப்பொருளின் பெறுமதி அதிகரித்தல்.
2. உற்பத்திப்பொருளுக்கு உயர்ந்த விலையை நிர்ணயிக்கலாம்.
3. இலாப எல்லையை உச்சப்படுத்தலாம்
4. சந்தைப் போட்டிகளுக்கு முகங் கொடுக்கலாம்.
5. வாடிக்கையாளரைக் கவரும் தன்மையை அதிகரிக்கலாம்.
6. உற்பத்திப் பொருளுக்கு வாடிக்கையாளர் விசுவாசம் கிடைத்தல்

(2x 1 = 2 புள்ளிகள்)

(iii) (அ) பின்வரும் ஒவ்வொரு விடயங்கள் தொடர்பிலும் ஆதியா மேற்கொள்ள வேண்டிய சட்டத் தேவைப்பாடுகள் எவை எனக் குறிப்பிடுக.
(1) வணிகப் பதிவு (01 புள்ளி)
(2) தொழில் வழங்குனரால் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) செலுத்தவேண்டிய பங்களிப்பு வீதம் (01 புள்ளி)

(ஆ) 'சுவை யோகட்' வணிகம் வருமான வரியை செலுத்த வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ளதா இல்லையா என்பதனைக் குறிப்பிட்டு உமது விடையினைச் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

அ) 1. வணிகப் பதிவு - கட்டாயம் பதிவு செய்யப்படல் வேண்டும் (1/2 புள்ளி)
ஆதியா பெயரில் காணப்படாமையால் 1918 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க வியாபார பெயர்ப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். (1/2 புள்ளி)
2. அடிப்படைச் சம்பளத்தில் 3 வீதம் பங்களிப்பு செய்தல் (1 புள்ளி)

(1 புள்ளி)

ஆ) இல்லை
சுவை யோகட் நிறுவனம் சட்ட ஆளுமையற்ற நிறுவனம் என்பதால் வரி செலுத்தத் தேவையில்லை. ஆதியா தனது சொந்தப் பெயரில் வரி செலுத்த வேண்டும். (1 புள்ளி)

(iv) (அ) ஆதியா தனது வணிகத்தின் மூலம் நிறைவேற்றக்கூடிய சமூகப் பொறுப்புகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகம் ஒன்று சமூகப் பொறுப்புகளில் ஏன் ஈடுபட வேண்டும் என்பதனை சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

iv. அ) 1. வேலைவாய்ப்பினை உருவாக்குதன் மூலம்
2. கழிவுப்பொருள் முகாமைத்துவம் செய்தவதன் மூலம்
3. பசுமை உற்பத்திகளை அல்லது சூழலுக்கு நேயமான உற்பத்திகளை மேற்கொள்வதன் மூலம்.
4. சமூக நலன்புரிச் சேவைகளை வழங்குவதன் மூலம்.
5. சூழலை நேசிப்பவராகக் வணிக கருமங்களை மேற்கொள்வதன் மூலம்.
6. தரமான உற்பத்திப்பொருட்களை வழங்குவதன் மூலம்
7. ஏனைய தரப்பினருக்கும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம்
8. வரி செலுத்தலை சரியாக மேற்கொள்வதன் மூலம் (2 x 1 = 2 புள்ளிகள்)

ஆ) வணிகமானது சமூகத்தில் இருந்தும் சூழலில் இருந்தும் பொது வளங்களை பெற்று பயன்படுத்துவதனால் வணிகத்திற்கு சமூகம் சார்பாக ஆற்ற வேண்டிய கருமங்கள் காணப்படுகின்றன.

(2 புள்ளிகள்)

(v) ஆதியாவின் வணிகத்தில் தாக்கம் செலுத்தக்கூடிய வெளிவாரி தரப்பினர் இருவரையும் உள்வாரி தரப்பினர் இருவரையும் பெயரிடுவதுடன், இவ்வணிகத்தின் மீது அவ்வொவ்வொரு தரப்பினராலும் செலுத்தக்கூடிய தாக்கம் ஒன்று வீதம் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

v. அ) உள்வாரித் தரப்பினர்

உரிமையாளர் (ஆதியா) -1. மூலதனத்தை ஈடுபடுத்தல்.
2. புத்தாக்கம் செய்தல்.
3. சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவதன் மூலம் வணிகத்தின் பிரதிவிம்பத்தை அதிகரித்தல்.
4. நம்பிக்கையை உருவாக்கல்

ஊழியர் - 1. கடமைகளை நிறைவேற்றல்.
2. வணிகங்களின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தல்.
3. தொழில் தொடர்பான விடயங்களில் பேரம் பேசுதல்.

(இரு தரப்பினரை பெயரிட 2 x 1/2 = 1 புள்ளி
தாக்கம் 2 x 1/2 = 1 புள்ளி)

வெளிவாரித் தரப்பினர்

- வாடிக்கையாளர் - 1. விலை பேரம் பேசல்
2. தரம் அதிகரித்தல்
3. வியாபார நிபந்தனைகளை பேரம் பேசல்.
4. நுகர்வோர் உரிமைகளை பாதுகாத்தல்
5. நுகர்வோர் பின்னூட்டல்களை வழங்கல்

- வழங்குனர் - 1. தரமான மூலப்பொருட்களை வழங்கல்
2. விலை பேரம் பேசல்
3. மூலப்பொருட்கள் வழங்கல் தொடர்பான நிபந்தனை விதித்தல்
4. தொடர்ச்சியாக மூலப்பொருட்களை வழங்கல்
5. சரியான நேரத்தில் வழங்கல்
6. பொருத்தமான வழங்கல் சேவைகளை மேற்கொள்ளல்

- வங்கி - 1. வட்டி மீது செல்வாக்கு செலுத்தல்
2. கடன் காலங்களையும் நிபந்தனைகளையும் விதித்தல்
3. கடன் திரும்ப செலுத்தும் காலம் தொடர்பான வரையறைகளை விதித்தல்
4. பிணை தொடர்பான நிபந்தனை விதித்தல்

- அரசு - 1. நிதி ஊக்குவிப்பை வழங்கல்
2. சாதகமான வியாபார சூழலை ஏற்படுத்தல்.

(இரு தரப்பினரை பெயரிட 2 x 1/2 = 1 புள்ளி
தாக்கம் 2 x 1/2 = 1 புள்ளி)

2. லெனோஜ் என்பவர் சொந்தமாக மென்பாக (software) அபிவிருத்திக் கம்பனி ஒன்றை இலங்கையில் ஆரம்பித்தார். ஆரம்பத்தில் இவரது வணிகமானது உள்நாட்டு வாடிக்கையாளரை அணுசரித்ததுடன் அரு படிப்படியாக சர்வதேச மட்டத்துக்கு விரிவுபடுத்தப்பட்டது. இக்காலகட்டத்தில், லெனோஜ் மாற்றமுறும் தலைமைத்துவப் பாங்கினை வெளிக்காட்டியதுடன் தனது வாடிக்கையாளர்களுடன் சுமுகமான தொடர்பையும் கட்டியெழுப்பினார். இவர் தனது ஆற்றல்களை மேலும் விருத்தி செய்வதற்காக பயிற்சிச் செயலமர்வுகளில் பங்குபற்றுவதில் அதிக அக்கறை காண்பிக்கின்றார். வணிக செயற்பாடுகளின் சிக்கலான தன்மை மற்றும் அளவு காரணமாக லெனோஜ் தனது வணிகத்தை வரையறுத்த தனியார் கம்பனியாக மாற்ற எதிர்பார்க்கின்றார்.

(i) (அ) தனியுடைமை வணிகத்தின் வரையறைகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) மேலே தரப்பட்டுள்ள சம்பவத்திற்கு அமைய லெனோஜ் கொண்டிருக்கும் முயற்சியாண்மைத் திறன்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

i. அ) 1. வரையறுக்கப்பட்ட நிதி மூலங்கள்

2. உரிமையாளரே தீர்மானம் எடுப்பதால் அவை தோல்வியடையக் கூடியதாக இருத்தல்

3. சட்டரீதியான தனிமனித அந்தஸ்து காணப்படாமை

4. தொடர்ந்து இயங்கும் தன்மை காணப்படாமை

5. வணிகம் விரிவடையும் போது வணிகச் செயற்பாடுகள் கடினமாக இருத்தல்

6. நட்டங்களை தனியாக ஒருவரே அனுபவிக்க வேண்டியிருத்தல்

7. இடர்களை தனியாக ஒருவரே அனுபவிக்க வேண்டியிருத்தல் (4 x 1/2 = 2 புள்ளிகள்)

ஆ) 1. தலைமைத்துவத் திறன்

2. ஆளிடைத் தொடர்புத் திறன்

3. முகாமைத்துவத் திறன் (2 x 1 = 2 புள்ளிகள்)

(ii) (அ) லெனோஜ் வலைத்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட மென்பாகத் தயாரிப்பினை உருவாக்குவாராயின், அது பொருட்களுக்குரியதா அல்லது சேவைகளுக்குரியதா என்பதனைக் குறிப்பிட்டு, உமது விடையை நியாயப்படுத்துவதற்கான காரணங்கள் இரண்டினையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) தனியுடைமை வணிகத்துடன் ஒப்பிடும்போது வரையறுத்த தனியார் கம்பனியில் காணப்படும் அனுகூலங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

ii. அ) சேவைக்குரியது (1 புள்ளி)

1. சேவைக்கட்டணம் செலுத்த வேண்டும் / பாவனைக்கு ஏற்ப கட்டணம் செலுத்த வேண்டும்

2. உருவாக்கிய நபரால் பிரதான கணனியில் தரவிறக்கம் செய்யப்பட்டு பயனாளர்கள் பயன்படுத்த முடியும் (2 x 1/2 = 1புள்ளி)

அல்லது

பொருளுக்குரியது (1 புள்ளி)

1. பயன்படுத்த அனுமதி பத்திரம் பெற வேண்டும்

2. மென்பாகமானது நிறுவனத்தின் கணனியல் உற்புகுத்தப்பட்டு பயன்படுத்தபடும்.

(2 x 1/2 = 1புள்ளி)

ஆ) 1. அதிக மூலதனத்தைத் திரட்டலாம் 2. சட்ட ஆளுமை உடையது

3. நீண்டகால வாழ்வுத்தன்மை உடையது. 5. வரையறுக்கப்பட்ட நட்டப்பொறுப்பு

4. சிறந்த முகாமைத்துவக் குழுவினரைக் கொண்டிருத்தல்

6. இடரைப் பகிர்ந்து கொள்ளலாம்.

7. முறையான நிறுவன முகாமைக் கட்டமைப்பு காணப்படல்

8. சிறந்த ஆளுகை காணப்படல். (2 x 1 = 2 புள்ளிகள்)

(iii) (அ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்திற்கு அமைவாக வரையறுத்த பொதுக் கம்பனியிலும், வரையறுத்த தனியார் கம்பனியிலும் நியமிக்கப்படக்கூடிய ஆகக் குறைந்த பணிப்பாளர்களின் எண்ணிக்கையினைத் தனித்தனியாகக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்திற்கு அமைவாக லெனோஜின் வணிகத்தை வரையறுத்த தனியார் கம்பனியாகக் கூட்டிணைப்பதற்கு கம்பனிப் பதிவாளர் காரியாலயத்துக்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் **நான்கினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

iii) அ) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி - 02

வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி - 01

(2 x 1 = 2 புள்ளிகள்)

ஆ) 1. முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம்

2. அகவிதிப் பத்திரம்

3. ஆரம்ப இயக்குனராகக் கடமையாற்றுவதற்கான சம்மதக் கடிதம்.

4. ஆரம்ப செயலாளராகக் கடமையாற்றவதற்கான சம்மதக் கடிதம்.

5. பெயர் உறுதிப்படுத்தல்

(4 x 1/2 = 2 புள்ளிகள்)

(iv) (அ) லெனோஜ் தனது வணிகத்தில் காணப்படும் சில நடவடிக்கைகளை வெளியார் மூலங்களில் (outsourcing) இருந்து பெற்றுக்கொள்வதனால் கிடைக்கக்கூடிய பயன்கள் **நான்கினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிக நடவடிக்கைகளை வெளியார் மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும்போது அவர் முகங்கொடுக்கக்கூடிய சவால்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

iv. அ) 1. செலவைக் குறைக்கலாம். (ஊழியர் / மேந்தலை)

2. வினைத்திறனை அதிகரிக்கலாம்

3. ஊழியப் படையைக் குறைக்கலாம்

4. தற்போது காணப்படும் உற்பத்தி இயலளவை அதிகரிக்கக்கூடிய ஆற்றல்.

5. நேரச் சிக்கனம்

6. அவசர கட்டளைகளை உடனடியாக நிறைவேற்றக் கூடியதாக இருத்தல்.

7. பிரதான வணிக நடவடிக்கையில் அதிக கவனம் செலுத்தலாம்.

8. ஆற்றல் மிக்க வெளியார் மூலம் சிறந்த அறிவுரைகளையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்

செலவு குறைத்தல்

(4 x 1/2 = 2 புள்ளிகள்)

ஆ) 1. பாதுகாப்பு, நம்பகத்தன்மை தொடர்பான பிரச்சினை காணப்படல்

2. நிறுவன பெறுமதி தொடர்பான கவனத்தை கொள்ளாது செயற்படல்

3. வெளிநபர்களது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது சிரமம்

4. தொடர்பாடல் தொடர்பான பிரச்சினைகள்

5. உள்ளக ஊழியர்கள் ஊக்கம் இழப்பர்.

6. தரம் தொடர்பான பிரச்சினை.

7. புதிய போட்டியாளர் உருவாகுவதற்கான சந்தர்ப்பம் காணப்படல்

8. நிறுவனம் தொடர்பான இரகசியங்கள் வெளியே செல்வதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படல்

(2x 1 = 2 புள்ளிகள்)

(v) இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வொன்றாக இவ்வணிகத்தின் மூலம் வழங்கக்கூடிய பங்களிப்புகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு அவற்றினை விளக்குக. (04 புள்ளிகள்)

v. 1. அந்நியச் செலாவணி உழைத்தல் மூலம்
2. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மூலம்
3. புத்தாக்கம் புனைவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குதல் மூலம்
4. வினைத்திறனை அதிகரிப்பதனூடாக கிரயத்தைக் குறைத்தல் மூலம்
5. வரி செலுத்துதல் மூலம்
6. தொடர்புடைய நிறுவனங்களின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தல் மூலம்

(பெயரிட 2 x 1 = 2 புள்ளிகள்
விளக்க 2 x 1 = 2 புள்ளிகள்)

3. (i) (அ) இலங்கை மத்திய வங்கியின் 'அரச கடன் முகாமைத்துவம்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
(ஆ) 'இலங்கையின் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின்' (SLIPS) வகிபாகத்தினை விளக்குக. (02 புள்ளிகள்)

i. அ) கிரயம் குறைந்த விதி மூலங்களில் இருந்து நிதியை திரட்டி பயனுறுதியான முதலீடுகளில் அவற்றை முதலீடு செய்வதுடன் தொடர்புடையது இலங்கை மத்திய வங்கியின் அரச கடன் முகாமைத்துவம் ஆகும்

(பூரண விடைக்கு 2 புள்ளிகள்)

ஆ) வங்கிகளுக்கு இடையிலான கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பதற்காக இணையத்தை பயன்படுத்தும் முறைமை ஆகும். இது இலங்கை மத்திய வங்கியினால் பராமரிக்கப்படுகின்றது.

(2 புள்ளிகள்)

(ii) (அ) அலகுப் பொறுப்பாட்சி முகாமைக் கம்பனிகளின் வகிபாகங்கள் யாவை? (02 புள்ளிகள்)
(ஆ) வங்கி ஒன்றினால் காசோலை ஒன்று மதிப்பிழப்பு செய்யப்படும்போது 'வரையுனரை நாடுக' எனக் குறிப்பிடப்படுவது எச்சந்தர்ப்பத்தில் ஆகும்? (02 புள்ளிகள்)

ii. அ) 1. முதலீட்டாளர்களிடமிருந்து நிதியைத் திரட்டி அவற்றை மிகவும் இலாபகரமான வழிகளில் முதலீடு செய்தல்.
2. அலகு பொறுப்பாட்சி நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் முதலீட்டு தொழிற்பாடுகளில் பங்கு பற்றுதலும் அலகு பொறுப்பாட்சி நிறுவனத்தின் ஆரம்பிப்பாளராக தொழிற்படலும்

(2 புள்ளிகள்)

ஆ) குறித்த நடைமுறைக் கணகக்கை வைத்திருக்கும் உரிமையாளரின் கணக்கில் போதிய மீதி காணப்படாத போது

(2 புள்ளிகள்)

(iii) (அ) காப்புறுதியில் பதிலாள் வைப்பு நந்துவம் என்பதால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
(ஆ) 'கடற் சரக்கு காப்புறுதி' என்பதனை அறிமுகப்படுத்துக. (02 புள்ளிகள்)

அ) காப்புறுதி செய்யப்பட்ட ஆதனம் ஒன்றிற்கு ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீட்டினை காப்பறுதி நிறுவனமானது காப்புறுதி செய்தவருக்கு செலுத்திய பின்னர் அச்சொத்து தொடர்பாக வெளியகப் பிரிவினரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய ஏனைய நன்மைகளை காப்புறுதி நிறுவனம் உரிமையாக்கிக் கொள்ளல் ஆகும். (2 புள்ளிகள்)

ஆ) கடல் வழிப் போக்குவரத்தின் போது கப்பலில் எடுத்துச் செல்லும் பொருட்களுக்கு ஏற்படக்கூடிய சேதத்திற்கான இழப்பீட்டினைப் பெற ஏற்றுமதியாளர் அல்லது இறக்குமதியாளரால் மேற்கொள்ளப்படும் காப்பறுதி ஒப்பந்தமாகும். (2 புள்ளிகள்)

(iv) (அ) 'முறைசாராத் தொடர்பாடல்' என்றால் என்ன என்பதனைக் குறிப்பிட்டு அதற்கு ஒரு உதாரணம் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) முறைசாராத் தொடர்பாடலின் அனுகூலங்கள் இரண்டினையும் பிரதிகூலங்கள் இரண்டினையும் தருக. (02 புள்ளிகள்)

iv. அ) அமைப்பு முறைக்கு அப்பால் / நிறுவனத்துக்கு வெளியே சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படாத தெளிவற்ற நிலையில் தகவல்கள் பாய்ந்து செல்வதன் மூலம் இடம் பெறும் தொடர்பாடல் ஆகும்.

உ + ம் : வதந்தி, அநாமதேய தொலைபேசி அழைப்பு (குறிப்பிட 1 புள்ளி , உதாரணம் 1 புள்ளி)

(ஆ)

அனுகூலங்கள்	பிரதிகூலங்கள்
1. முறைசார் தொடர்பாடலை விட வேகம் கூடியது.	1. அநேக பொய்யான தகவல்கள் இடம் பெற வாய்ப்பு அதிகம்
2. தனிநபர்களின் சமூக, மற்றும் உள ரீதியான தேவைகளை நிறைவேற்றல்.	2. பிழையான விளக்கம் பெறப்படல்.
3. விளக்கம் பெறுவதற்கு கடினமான உண்மைத் தகவல்களை இனங் கண்டு கொள்ள முடிதல்.	3. நன்மதிப்பிற்கு களங்கம் எற்படல்.
4. முன்னரே தீர்மானம் எடுக்கக் கூடியதாக இருத்தல்.	4. தொடர்புடைய சகல தரப்பினருக்கும் தகவல் சென்றடையாது
	5. பொறுப்பு கூறுவதற்கு ஒருவரும் காணப்படமாட்டார்கள்

(2 x 1/2 = 1 புள்ளி) (2 x 1/2 = 1 புள்ளி)

(v) (அ) பொருட்களைக் கொண்டு செல்லல் தொடர்பில் கொள்கலன்மயமாக்கலின் (containerization) மூலம் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் நான்கினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) போக்குவரத்திற்கும் ஏற்பாட்டியலுக்கும் (Logistics) இடையிலான வேறுபாட்டினை சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

V. அ) 1. பொருளுக்கான பாதுகாப்பு கூடியதாகும்.

2. இலகுவாக போக்குவரத்து செய்யக்கூடியதாக இருத்தல்

3. நியமப்படுத்தக்கூடியதாகும் (நீளம், அகலம், நிறைக்கு ஏற்ப)

4. பொருட்களை கையாளல் இலகுவானதாகும்

5. பெருஞ்சாதார சிக்கனம் கொண்டதாகும் (4x 1/2 = 2 புள்ளிகள்)

ஆ) பொருட்கள்/ மூலப்பொருட்கள் , மக்கள் ஆகியவற்றை ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு வித்தியாசமான பல்வேறு ஊடகங்களின் மூலம் இடம் நகர்த்தும் செயற்பாடு போக்குவரத்து ஆகு (1 புள்ளி)

நுகர்வோர் தேவை, விருப்பங்களை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்தும் நோக்கில் பொருட்க சேவைகள் மற்றும் அது தொடர்பான தகவல்களை முன்னும் பின்னும் பாய்ந்து செல்லல், அவற்றி ஆரம்ப நிலையிலிருந்து இருந்து (Point of orgin) நுகரும் சந்தர்ப்பம் வரை (Point of consumpt வினைத்திறனாகவும் பயனுறுதி கொண்டதாகவும் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தல் செயன்முறை ஏற்பாட்டியல் ஆகும். (1 புள்ளி)

4. (i) (அ) மொத்த வியாபாரத்திற்கும் சில்லறை வியாபாரத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் **நான்கினைத்** தருக. (02 புள்ளிகள்)

4 (ஆ) கைத்தொழில் இரசாயனப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சியசாலையை வடிவமைக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(அ)

மொத்த வியாபாரம்	சில்லறை வியாபாரம்
1. மீள் விற்பனைக்காக கொள்வனவு செய்தல்	1. இறுதி நுகர்வுக்காக விற்பனை செய்தல்.
2. ஒப்பீட்டளவில் அலகு விலை குறைவு	2. ஒப்பீட்டளவில் விலை அதிகம்
3. கொள்வனவு, விற்பனை செய்யும் தொகை அதிகம்	3. ஒப்பீட்டளவில் குறைவு
4. ஒரு சில பொருட்கள் மட்டும்	4. பல்வேறு வகையான பொருட்கள்
5. கொள்வனவாளர் குறைவு	5. கொள்வனவாளர் அதிகம்
6. சிறந்த வாடிக்கையார் தொடர்பு	6. ஒப்பீட்டளவில் வாடிக்கையாளர் தொடர்பு குறைவு

(4 சோடி x ½ = 2 புள்ளிகள்)

ஆ) 1. சட்ட நியமங்களுக்கு / தேவைப்பாடுகளுக்கு ஏற்ப களஞ்சியசாலைகளை அமைத்தல்

2. இரசாயன பொருட்களின் திவீரமான தன்மைக்கு ஏற்ப வெவ்வேறாக வகைப்படுத்தி வைக்கக்கூடியதாக இருத்தல்

3. சரியான வெப்பநிலை, ஈரப்பதன் போன்றவை காணப்படக் கூடியதாக இருத்தல்

4. அவசர நிலைமைகளின் போது எதிர்கொள்ளக்கூடிய வகையில் இருத்தல்.

5. சூழல் பாதிப்புகளை இயன்றளவில் குறைத்தல்.

6. சமூக பாதிப்புக்களை குறைத்தல்.

7. இறுக்கமான வழிகளைப் பின்பற்றல். (2 x 1 = 2 புள்ளிகள்)

(ii) (அ) இலத்திரனியல் வணிக மாதிரிகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, ஒவ்வொன்றினையும் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) 'இலத்திரனியல் சில்லறை வணிகம்' (e-retailing) என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

அ) 1. **B2B** - வணிகரிடமிருந்து வணிகருக்கு
2. **B2C** - வணிகரிடமிருந்து நுகர்வோருக்கு
3. **C2C** - நுகர்வோரிடமிருந்து நுகர்வோருக்கு
4. **G2C** - அரசிடமிருந்து நுகர்வோருக்கு
5. **B2G** - வண்கிரிடமிருந்து அரசிற்கு
6. **G2B** - அரசிடமிருந்து வணிகருக்கு
7. **C2G** - பிரஜைகளிடமிருந்து அரசிற்கு
8. **G2G** - அரசிடமிருந்து அரசுக்கு

(குறிப்பிட 2 x ½ = 1 புள்ளி, விளக்க 2 x ½ = 1 புள்ளி)

ஆ) எண்ணியல் தொழில்நுட்பத்தின் மூலம் இறுதி நுகர்வுக்காக பொருட்கள் சேவைகளை கொள்வனவு விற்பனை செய்வதுடன் தொடர்புடைய சகல நடவடிக்கைகளும் ஆகும்.

(2 புள்ளிகள்)

(iii) (அ) 'உற்பத்திப்பொருள் அங்கீகார வணிகம்' என்பதனை வரையறுக்குக. (02 புள்ளிகள்)
(ஆ) வணிகமொன்றினை சர்வதேசமயப்படுத்துவதனூடாக கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

அ) குறித்த உற்பத்திப்பொருள், பண்டக்குறி அல்லது வியாபார குறியின் உடமையாளரானவர் (அங்கீகாரம் வழங்குபவர்) குறித்த உற்பத்திப்பொருள், பண்டக்குறி அல்லது வியாபார குறியைப் பயன்படுத்தி வணிகத்தை செயற்படுத்துவதற்கான உரிமையை தனிப்பட்ட வேறொருவருக்கு அல்லது நிறுவனத்திற்கு (அங்கீகாரம் பெறுபவர்) வழங்கும் வணிக ஒழுங்கு முறை உற்பத்திப்பொருள் வணிக அங்கீகாரம் ஆகும். (2 புள்ளிகள்)

ஆ) 1. சந்தை விரிவடைதல்.
2. நவீன தொழினுட்பத்தைப் பயன்படுத்த முடிதல்.
3. பூகோள ரீதியாக பொருட்களை விநியோகிக்க முடிதல்
4. பண்டக்குறிப் பெயருக்கு சர்வதேச ரீதியாக அங்கிகாரம் கிடைத்தல்
5. அதிக இலாபத்தை உழைக்க முடிதல்.
6. அமைவிட அனுகூலத்தை பெற முடிதல்
7. பொருளாதார சிக்கன அனுகூலத்தை அடைய முடிதல் (4 x ½ = 2 புள்ளிகள்)

(iv) (அ) வர்நாமத்தின் தொழிற்பாடுகள் **இரண்டினை** விபரிக்குக. (02 புள்ளிகள்)
(ஆ) 'இறக்கி ஏற்றல் வியாபாரம்' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

அ) 1. குறிப்பிட்ட பொருள் தொகுதியானது கப்பல் கம்பனிக்கு, கப்பல் முகவருக்கு / கப்பல் தலைவனுக் கையளிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் எழுத்து வடிவிலான ஆவணமாக தொழிற்படல்
2. பொருட்களின் உரிமைக்கான சான்றாகத் தொழிற்படல்
3. ஏற்றுமதியாளருக்கும் கப்பல் கம்பனி அல்லது கப்பல் முகவருக்கும் இடையிலான உடன்படிக்கையாகத் தொழிற்படல்
4. பொருட்களை சுங்க நடைமுறைகளிலிலிருந்து விடுவிக்க உதவி செய்யும் ஆவணமாக தொழிற்படல்
(2 x 1 = 2 புள்ளிகள்)

ஆ) வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை குறித்த நாட்டிற்குள் கொண்டு வரு துறைமுகத்தினுள் களஞ்சியப்படுத்தி மீண்டும் இன்னொரு நாட்டிற்கு அல்லது நாடுகளு ஏற்றுமதி செய்தல் இறக்கி ஏற்றல் வியாபாரம் ஆகும். (2 புள்ளிகள்)

(v) (அ) பல்பக்க வியாபார உடன்படிக்கைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ஆ) பல்பக்க வியாபார உடன்படிக்கைகள் ஊடாக நாடொன்று அடைந்துகொள்ளும் அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

அ) 1. NAFTA - வட அமெரிக்க சுதந்திர வியாபார ஒப்பந்தம்
2. SAFTA - தெற்காசிய சுதந்திர வியாபார ஒப்பந்தம்
3. APTA - ஆசிய பசுபிக் வியாபார ஒப்பந்தம்
4. EEA - ஐரோப்பிய பொருளாதார ஒப்பந்தம்
5. AFTA - ஆசியான் சுதந்திர வியாபார ஒப்பந்தம்
6. BIMSTEC - வங்காள விரிகுடா பல்துறை தொழிநுட்ப பொருளாதார கூட்டமைப்பு
(2 x 1 = 2 புள்ளி

ஆ) 1. சந்தையை விரிவாக்கம் செய்ய முடிதல்
2. உற்பத்திப்பொருட்களுக்கு உறுதியான சந்தை காணப்படல்
3. சர்வதேச ஒத்துழைப்பு அபிவிருத்தியடைதல்.
4. விலை ஏற்றத் தாழ்வுகளுக்கு இலகுவாக முகம்கொடுக்கலாம்.
5. தீர்வை விலக்கு போன்ற பல்வேறுப்பட்ட வசதிகளை பெறலாம்
6. சகல அங்கத்துவ நாடுகளுக்கும் சம உரிமை கிடைப்பதை உறுதிப்படுத்தலாம்
7. வேலைவாய்ப்புக்களை விரிவாக்க முடிதல்

(4 x ½ = 2 புள்ளிகள்)

5

பகுதி II

5. கமலினி அச்சக கம்பனி ஒன்றின் உடைமையாளர் ஆவார். கம்பனியின் வளர்ச்சியோடு அமைப்பு வரைபடத்தினை உருவாக்கி அதிகாரத்தை கையளிக்க வேண்டுமென கமலினி கருதுகின்றார். அச்சிடலின் தரத்தை உயர்த்துவது தொடர்பில் அவரால் கட்டுப்பாட்டு முறைமைகளும் ஊழிய ஊக்கப்படுத்தல் தந்திரங்களும் பின்பற்றப்பட்டன.

(i) (அ) 'அமைப்பு வரைபடம்' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) நிறுவனக் கட்டமைப்பினை உருவாக்கும்போது கமலினி கருத்திற் கொள்ள வேண்டிய தத்துவங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

அ) முறைசார்ந்த அமைப்பு ஒன்றினுள் பல்வேறு கருமங்கள், பதவிகள், அதிகாரங்கள், வகைகூறல்கள், பொறுப்புகள் மற்றும் இணைப்பாக்கம் போன்றன பகிர்ந்தளிக்கப்பட்ட முறையினை எடுத்துக் காட்டும் வழி அமைப்பு வரைபடம் ஆகும்.

(2 புள்ளிகள்)

ஆ) 1. கட்டளையிடலின் ஒரினத்தன்மை
2. கட்டளைச் சங்கிலி
3. கட்டுப்பாட்டு விசாலம்
4. மையப்படுத்தல் / பன்முகப்படுத்தல்
5. தொழில் சிறப்புத்தேர்ச்சி
6. சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் நடைமுறைகள்
7. இணைப்பாக்கம்
8. அதிகார வரிசை

(4 x ½ = 2 புள்ளிகள்)

(ii) (அ) 'அதிகாரத்தைக் கையளித்தல்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ஆ) அதிகாரத்தைக் கையளிக்கும்போது கமலினி முகங்கொடுக்கக்கூடிய சவால்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

அ) மேல் மட்டத்தில் உள்ள அதிகாரிகள் கீழ் மட்ட ஊழியர்களுக்கு தீர்மானம் எடுத்தலுக்கான அதிகாரத்தை வழங்கல் ஆகும். (2 புள்ளிகள்)

ஆ) 1. ஊழியர்களின் திறனற்ற தன்மை
2. ஊழியர்களின் வகைகூறலுக்கான பற்றாக்குறை
3. நிறுவன இரகசியங்கள் வெளிநபருக்கு செல்லும் என்றும் எண்ணம்
4. கீழ்மட்ட ஊழியர்கள் பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் ஏற்க தயங்குதல்

(2 x 1 = 2 புள்ளிகள்)

(iii) (அ) கமலினியின் நிறுவனத்திற்கு ஊழிய ஊக்கப்படுத்தல் ஏன் தேவைப்படுகின்றது என்பதை விளக்குக. (02 புள்ளி

(ஆ) தனது வணிகம் தொடர்பில் கமலினியினால் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நிதிசாரா ஊக்குவிப்புத் தந்திரங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளி

அ) 1. ஊழியர் உற்பத்தித்திறனை அதிகரிக்க
2. சிறந்த தொழில் உறவினை மேம்படுத்த
3. வணிகத்தின் நன்மதிப்பை அதிகரிக்க
4. ஊழியர் வரவின்மையை குறைவடையச் செய்ய
5. ஊழியர் புரள்வைக் குறைக்க
6. வள வீண்விரயங்களைக் குறைக்க
7. மகிழ்ச்சியான வேலைப்படையை உறுதி செய்ய
8. ஊழியர்களின் விசேட திறன்கள் மற்றும் ஆற்றல்களை முதலீடாக்க
9. நிறுவனத்தின் இலக்குகள், நோக்கங்களை நிறைவேற்ற (~~4 x ½ = 2~~ புள்ளி

2 × 1 = 2

ஆ) 1. ஊழியர்களை பயிற்றுவித்தல்
2. பதவி உயர்த்தல்
3. தொழில் பாதுகாப்பை உறுதி செய்தல்
4. பொருத்தமான வேலைச்சூழலை ஏற்படுத்தல்
5. நவீன உபகரணங்களை வழங்குதல்
6. சுகாதார வசதிகள் வீடு, உணவு, குடிபானங்கள், ~~சீருடைகள்~~ பெற்றுக் கொடுத்தல்.
7. முகாமைத்துவத்தில் ஊழியர்களை தொடர்புபடுத்துதல்.
8. சுற்றுலாக்கள், பொழுதுபோக்கு, விளையாட்டு வசதிகள் என்பவற்றை ஏற்பாடு செய்தல்
9. ஊழியர்களைப் பாராட்டுதல் (விருது வழங்கல்)
10. ஊழியர்களுக்கு அதிகாரத்துவம் அளித்தல்(Empowerment) 2 × 1 = 2 (~~4x 1/2~~ = 2 புள்ளி

(iv) (அ) உற்பத்தி தொடர்பில் கமலினியினால் கணனிமயப்படுத்தப்பட்ட எண்ணிக்கைக் கட்டுப்பாட்டு முறை (CNC) பயன்படுத்தப்படுமாயின் அச்சிடலின் தரம் எவ்வாறு விருத்தியடையும் என்பதனை விளக்குக. (02 புள்ளி

(ஆ) கமலினி கம்பனியின் உற்பத்தி விபரங்கள் சில பின்வருமாறு

விபரம்	மதிப்பிடப்பட்ட	உண்மை
அலகொன்றுக்கான மூலப்பொருட் கிரயம்	ரூ. 200	ரூ. 250
ஒரலகு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்களின் அளவு	06 kg	08 kg

ஜனவரி மாதத்தில் கம்பனியானது 300 அலகு முடிவுப் பொருட்களை உற்பத்தி செய்யுமாயின்:

(1) விலை மாறற்றிறனினைக் (Price variance) கணிப்பிடுக. (01 புள்

(2) மேலே (1) இல் கணிப்பிடப்பட்ட விலை மாறற்றிறனானது கமலினியின் கம்பனிக்கு சார்பானதா அல்லது எதிரானதா என்பதனைக் குறிப்பிடுக. (01 புள்

அ) 1. விரயம் குறைவடைவதன் மூலம்
2. உயர்ந்தளவிலான சரியான தன்மை மூலம் (2 x 1 = 2 புள்ளி

ஆ) 1. விலை மாறற்றிறன் 50 X 300 = 15000/= (1 புள்

2. எதிரானது (1 புள்

(v) கமலினியினால் அச்சிடல் தொடர்பில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய மிகவும் பொருத்தமான உற்பத்தி முறையினைக் குறிப்பிட்டு, அதில் காணப்படும் அனுகூலங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

தொகுதி உற்பத்தி (1 புள்ளி)

1. தொகுதி வாரியாக வடிவமைப்பில் மாற்றம் செய்யக்கூடிய இயலுமை காணப்படல்.
2. ஒப்பீட்டு ரீதியில் அதிகளவில் உற்பத்தி செய்ய முடியுமாக இருப்பதனால் அலகுக் கிரயத்தைக் குறைக்க முடியும்.
3. கட்டளைகளை முன்னுரிமைக்கு ஏற்ப நிறைவேற்ற முடிதல்.
4. உற்பத்தித் தொகையை அதிகரிக்கலாம்.
5. தனிப்பயனாக்க முடிதல். (Customization) (3 x 1 = 3 புள்ளிகள்)

6. காசிமினால் அண்மையில் மின்சாரப் பாவனைப் பொருட்களை உற்பத்தி செய்யும் கம்பனி ஒன்று இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்டத்திற்கு அமைய அவரது உற்பத்திப்பொருட்கள் அறிமுகக் கட்டத்தில் காணப்படுகின்றபோதிலும் இவர் உற்பத்தியின் தரம் தொடர்பில் அதிக கரிசனை செலுத்துகின்றார். அதேபோல் நிதியீட்ட மூலங்கள் மற்றும் வணிகத்தின் இலாப - நட்டமற்ற நிலை தொடர்பிலும் அதிக ஆர்வம் காட்டுகின்றார்.

(i) (அ) அறிமுகக் கட்டத்தில் காணப்படும் உற்பத்திப்பொருளொன்றின் குணாம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்திப்பொருளின் அறிமுகக் கட்டத்தில் காசிமினால் முகங்கொடுக்கக்கூடிய சவால்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

அ) 1. விற்பனை குறைவு
2. இலாபம் / நட்டம் குறைவு
3. உயர்வான மேம்படுத்தல் செலவு
4. ஒரு அடிப்படை உற்பத்திப்பொருள் ஆகும் (2 x 1 = 2 புள்ளிகள்)

ஆ) 1. குறைவான நுகர்வோர் விழிப்புணர்வு
2. போட்டிசார், சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் பிரச்சினைகள்
3. நுகர்வோர் விருப்பமின்மை/ புறக்கணிப்பு
4. விலையிடல் முறைகளை இனங்காணுவதில் ஏற்படும் பிரச்சினைகள்
5. இலக்குச் சந்தையை இனம் காணல் தொடர்பான பிரச்சினைகள்
6. சந்தை நிலைப்படுத்தலில் ஏற்படும் பிரச்சினைகள்
7. விநியோக வழிமுறைகளில் ஏற்படும் பிரச்சினைகள் (2 x 1 = 2 புள்ளிகள்)

(ii) (அ) உற்பத்திப்பொருட்களை வடிவமைக்கும்போது காசிம் கருத்திற் கொள்ளவேண்டிய தரக் கூறுகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்திப்பொருள் மேம்படுத்தலுக்காக காசிமினால் பயன்படுத்தக்கூடிய விளம்பரப்படுத்தல் முறைகள் **நான்கினைப்** பரிந்துரைக்குக. (02 புள்ளிகள்)

அ) 1. நீடித்த பாவனை
2. சரியாக தொழிற்படும் தன்மை
3. பாதுகாப்புத்தன்மை
4. நம்பகத்தன்மை
5. நியமங்களுக்கு ஏற்புடையதான தன்மை
6. பொருத்தப்பாடுடைய தன்மை (4x ½ = 2 புள்ளிகள்)

ஆ) தொலைக்காட்சி, வானொலி, துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள், விளம்பரப்பலகைகள், எண்ணியல் பலகைகள், பருவகால வெளியீடுகள், புதினப் பத்திரிகைகள், சிற்றேடுகள், சமூக ஊடகங்கள். இலத்திரனியல் தபால் மூலமான பிரச்சாரங்கள். (4x ½ = 2 புள்ளிகள்)

(iii) (அ) 'சந்தைத் துண்டமாக்கல்' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) மின்சாரப் பாவனைப் பொருட்களின் உள்நாட்டுச் சந்தையைத் துண்டமாக்குவதற்கு காசிமினால் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறைகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

அ) முரண்பட்ட பண்புகளைக் கொண்ட முழுமையான சந்தையினை, ஒத்த பண்புகளைக் கொண்ட குழுக்களாக வகைப்படுத்தி வேறுபடுத்துவது சந்தைத் துண்டமாக்கல் ஆகும்.

(2 புள்ளிகள்)

ஆ) 1. மக்கட் தொகை / குடிசனத் தொகை ரீதியான (சமூக) - வருமானம், சமூகவகுப்புக்கள்

2. நடத்தை ரீதியாக - கொள்வனவு செய்யும் சந்தர்ப்பம், விசுவாசம், (2x 1 = 2 புள்ளிகள்)

(iv) (அ) வணிகம் தொடர்பில் காசிமினால் ஈடுபடுத்தக்கூடிய நேர் நிதி மூலங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) காசிமினுடைய வணிகத்தை முன்னெடுப்பதற்கு மூலதன முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்ளத் தேவையான சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

அ) 1. நிறுத்திவைத்த இலாபம்

2. திரண்ட பெறுமானத் தேய்வு

3. மேலதிக சொத்து விற்பனை

4. தொழிற்படு மூலதனம் தொடர்பிலான இறுக்கமான கட்டுப்பாடு

~~5. வங்கிக் கடன்கள்~~

~~6. தனிப்பட்ட கடன்கள்~~ (2x 1= 2 புள்ளிகள்)

ஆ) 1. வணிகத்தை நவீனமயப்படுத்தும் போது

2. வணிகத்தை விரிவாக்கம் செய்யும் போது

3. வணிகத்தை பல்வகைப்படுத்தும் போது

4. நிலையான சொத்து/ நீண்டகால பிணைகள் கொள்வனவின் போது (2x1 = 2 புள்ளிகள்)

(v) காசிம் வணிகத்தின் உற்பத்தியுடன் தொடர்புடைய கிரயம் பற்றிய சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

		ரூ.
நிலையான கிரயம்	-	300 000
மாறும் கிரயம் (அலகொன்றிற்கு)	-	500
விற்பனை விலை (அலகொன்று)	-	1 000

(அ) இலாப - நட்டமற்ற புள்ளியினைக் கணிப்பிடுக.
(1) அலகுகளில் (01 புள்ளி)
(2) ரூபாயில் (01 புள்ளி)
(ஆ) கம்பனியானது 1 500 அலகுகளை விற்பனை செய்யுமாயின் இலாபம் எவ்வளவு? (01 புள்ளி)
(இ) கம்பனியானது விற்பனை விலையினை இரு மடங்காக்கினால் புதிய இலாப - நட்டமற்ற புள்ளியானது அலகுகளில் எவ்வளவாகும்? (01 புள்ளி)

(அ) இலாப நட்டமற்ற புள்ளி (BEP)

1. அலகுகளில் $= \frac{\text{மொத்த நிலையான கிரயம்}}{\text{அலகுக்கான பங்களிப்பு}}$

$= \frac{300\,000}{1000 - 500}$

$= \frac{300\,000}{500}$

= 600 அலகுகள ✓ (1 புள்ளி)

2. ரூபாவில் = 600 X 1000 = ரூபா 600 000 ✓ (1 புள்ளி)

(ஆ)

எதிர்பார்க்கப்பட்ட அலகுகள் $= \frac{\text{மொத்த நிலையான கிரயம் + இலாபம்}}{\text{ஒரு அலகுக்கான பங்களிப்பு}}$

$1500 = \frac{300\,000 + \text{இலாபம்}}{500}$

1500X 500 = 300 000 + இலாபம்
750,000-300 000 = இலாபம்
இலாபம் = ரூபா 450 000 ✓ (1 புள்ளி)

(இ)

இலாப நட்டமற்ற புள்ளி $= \frac{\text{மொத்த நிலையான கிரயம்}}{\text{அலகுக்கான பங்களிப்பு}}$

2000 அலகுகளில்

$= \frac{300\,000}{2000 - 500}$

$= \frac{300\,000}{1500}$

= 200 அலகுகள் ✓ (1 புள்ளி)

7. (i) (அ) வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றினை கொழும்பு பங்கு பரிமாற்றகத்தில் (CSE) பதிவு செய்யக்கூடிய வழிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளி

(ஆ) 'அனைத்து பங்கு விலைச் சுட்டி' (ASPI) என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளி

அ) 1. ஆரம்ப பொது வழங்கல்

2. விற்பனைக்கான கொடை முனைவு

3. அறிமுகப்படுத்தல் மூலம்

(2 x 1 = 2 புள்ளி

ஆ) கொழும்பு பங்குப் பரிமாற்றகத்தில் பட்டியற்படுத்தப்பட்ட சகல கம்பனிகளினதும் வாக்குரிமையுள்ள சாதாரண பங்குகளின் விலை மட்டங்களில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தை சுட்டிக்காட்டுவது ஆகும்.

(2 புள்ளி

(ii) (அ) காசுப் பாதீட்டிற்கும் மூலதனப் பாதீட்டிற்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளி

(ஆ) நிதி முகாமைத்துவத்தின் நோக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளி

காசுப்பாதீடு	மூலதனப் பாதீடு
1. குறுங்காலம்	1. நீண்டகாலம்
2. காசுப்பாய்ச்சல் தொடர்பான தீர்மானங்கள்	2. முதலீடு தொடர்பான தீர்மானங்கள்
3. காசுப் பெறுவனவு கொடுப்பனவு தொடர்பானது	3. முதலீடு மற்றும் திரும்பல் தொடர்பானது

(2 ஒப்பிட்டிற்கு x 1 = 2 புள்ளி

அ) 1 இலாபத்தை உச்சப்படுத்தல்

2. பங்கொன்றிற்கான உழைப்பை உச்சப்படுத்தல்

3. நீண்டகால நிதி உறுதிப்பாட்டினை உறுதி செய்தல்

4. திரவத்தன்மையை உத்தம மட்டத்தில் பேணுதல்

5. பங்குதாரரின் செல்வத்தை உச்சப்படுத்தல்

6. வளங்களின் உத்தம பயன்பாடு

7. அக்கறையுடைய தரப்பினரின் திருப்தி

8. இடர் முகாமைத்துவம்

(4 x 1/2 = 2 புள்ளி

(iii) (அ) முதலீட்டின் மீதான திரும்பல் (ROI) விகிதத்தினை விளக்குவதுடன், அதனை பயன்படுத்துவதன் மூலம் முதலீட்டாளர் மேற்கொள்ளக்கூடிய தீர்மானங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளி

(ஆ) நிறுவனமொன்றிற்கு மனித வளத் திட்டம் ஏன் அவசியம் என்பதனைக் குறிப்பிட்டு, அதனூடாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளி

அ) மொத்த முதலீட்டிற்கும் நிறுவனத்தின் திரும்பலுக்கும் இடையிலான தொடர்பை விகிதாசாரத்தில் எடுத்துக் காட்டுவதாகும் (1 புள்

1. முதலீட்டு வாய்ப்புக்களை தெரிவு செய்ய முடிதல்

2. முதலீட்டு கலவை முகாமைத் தீர்மானங்களை மேற்கொள்ள முடிதல்

3. முதலீட்டுத் தீர்மானம் தொடர்பான அளவுகோல் / மட்டக் குறியாளுகையை தீர்மானித்தல் (Bench marking)

(2 x 1/2 = 1 புள்

ஆ) நிறுவனத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் அடையக்கூடியதாகவும் நிறுவன நடவடிக்கைகளை அமுல்படுத்தக்கூடியதாகவும் எதிர்காலத்திற்கு தேவையான ஊழியர்கள் தொடர்பான தீர்மானம் எடுத்தலுக்கு (1 புள்ளி)

1. நிறுவனத்தின் எதிர்கால ஊழியர் தேவைப்பாட்டை அறிந்து கொள்ளலாம்.
2. ஊழியர் பற்றாக்குறை, மிகையை இனம் காண்பதன் மூலம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஊழியக் கிரயத்தைக் குறைக்கலாம்
3. சடுதியான ஆட்சேர்ப்பினால் நிகழக்கூடிய தேவையற்ற கிரயங்களை தவிர்க்கலாம்.
4. மனித வளத்தை வினைத்திறனாகவும், உற்பத்தி இயலுமையுடன் பயன்படுத்தலாம்.
5. நிறுவனத்தின் ஏனைய முகாமைக்கருமங்களை எதிர்பார்க்கப்பட்டவாறு நெறிப்படுத்தவாம்.
6. உயர் தேர்ச்சி கூடிய ஊழியர் விருத்தியை ஏற்படுத்தலாம். (2x 1/2 = 1 புள்ளி)

(iv) (அ) அமைய ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதனூடாக நிறுவனம் ஒன்றிற்கு ஏற்படக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) செயற்றிறன் மதிப்பீட்டின் மூலம் தொழில்வழங்குநருக்கும், ஊழியருக்கும் கிடைக்கும் பயன்கள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

அ) **அனுகூலங்கள்**

1. நிரந்தரமாக்குவதற்கான எந்த உத்தரவாதமும் இல்லை
2. ஊழிய கிரயம் குறைவு
3. தேவையான நேரத்தில் ஊழியர்களை விலக்கலாம்
4. ஆட்சேர்பில் நெகிழ்வுத்தன்மை
5. ஊழியர் உரிமைகள் தொடர்பில் குறைவான பேரம் பேசல் (2x 1/2 = 1 புள்ளி)

பிரதிகூலங்கள்

1. ஊழியர்களின் வகைகூறல் குறைவடையும்.
2. ஊழியர் விசுவாசம் இன்மை
3. ஊழியர் அர்ப்பணிப்பு குறைவு
4. மீள் ஆட்சேர்ப்பினால் மேலதிக செலவு ஏற்படல்
5. ஊழியர் வரவின்மை அதிகம் (2x 1/2 = 1 புள்ளி)

ஆ) **தொழில் வழங்குனருக்கு**

1. பயிற்சி அளித்தலின் தேவைப்பாட்டினை அறிய முடிதல்
2. பதவியுயர்வு, இடமாற்றம் தொடர்பான தீர்மானம் எடுக்க முடிதல்
3. சம்பள அதிகரிப்பு தொடர்பான தீர்மானம் எடுக்க முடிதல்
4. ஊழியர் உற்பத்தித்திறனை அதிகரிக்க முடிதல் (2x 1/2 = 1 புள்ளி)

ஊழியருக்கு

1. ஊழியர் ஊக்குவிப்புக்களை அதிகரிக்க முடிதல்
2. பிற நலன்களை அனுபவிக்க முடிதல்
3. எதிர்கால பதவியுயர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமையினை பெறமுடிதல்
4. தனிப்பட்ட நலன்களை அதிகரிக்க முடிதல்
5. தனிப்பட்ட பலம், பலவீனம் என்பவற்றை அறிந்துகொள்ள முடிதல்

(2 x 1/2 = 1 புள்ளி)

(v) (அ) வேலையின் போதான பயிற்சியினைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய முறைகள் இரண்டினைக் குறிப்பிட்டு அதனூடாக நிறுவனமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளி

(ஆ) பயனுறுதியான மனத்தாங்கல் கையாளல் செயன்முறையினூடாக நிறுவனம் ஒன்றிற்கு கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் நான்கினைத் தருக. (02 புள்ளி

(மொத்தம் 20 புள்ளி

அ) 1.. தயார்ப்படுத்தல் - Coaching

2. பயிலுனர் பயிற்சி - Apprenticeship

3. வேலைச்சுழற்சி - Job Rotation

4. உள்ளகப்பயிற்சி - Internships

5. சிரேஷ்ட அதிகாரியின் கீழ் கற்றல் பயிற்சி - Understudy Training

6. வழிகாட்டல் - Mentoring

7. சிரேஷ்ட அதிகாரி மறைமுகமாக அவதானிக்கும் பயிற்சி - Shadow Training

(2 x 1/2 = 1 புள்ளி

பயன்கள்:

1. ஊழியர் பயிற்சியில் இருந்தாலும் உற்பத்திக்கு பாதிப்பில்லை

2. பயிற்சிக் கிரயத்தைக் குறைக்கலாம்

3. பயனுறுதியான பயிற்சி

4.நிறுவனத்தின் மீதான ஊழியரது நல்லபிப்பிராயம் பலமடையும்.

(2 x 1/2 = 1 புள்ளி

ஆ) 1. ஊழியர் புரள்வு குறைவடையும்

2. ஊழியர் வரவின்மை கட்டுப்படுத்தப்படும்

3. தொழிற்சங்க நடவடிக்கை குறைவடையும்

4. சிறந்த தொழில்உறவு மற்றும் கைத்தொழில் நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படும்

5. நிறுவன நன்மதிப்பு உயரும்

6. ஊழியர் ஊக்கப்படுத்தப்படுவர்

(4 x 1/2 = 2 புள்ளி

8 **8.** (i) (அ) 'வெளியேறும் போதான நேர்முகப் பரீட்சை' (Exit interview) என்பதனால் கருதப்படுவது யாதென விளக்குவதுடன், அதனால் நிறுவனம் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளி

(ஆ) தரவுச் செயலாக்கச் செயன்முறையினை உதாரணமொன்றினூடாக விளக்குக. (02 புள்ளி

அ) நிறுவனத்தில் கடமை புரிந்து விலகும் ஊழியருடன்/ விலகிய ஊழியருடனான நிறுவன முகாமையா நேருக்கு நேர் மேற்கொள்ளும் கலந்துரையாடல் வெளியேறும் போதான நேர்முகப் பரீட்சையாகு (1 புள்

பயன்கள்

1. ஊழியர் விலகுவதற்கான அல்லது விலகியதற்கான காரணத்தை அறியலாம்.
2. அடையாளம் கண்ட பிரச்சினை தொடர்பான தீர்வை இனங்காணலாம்.
3. நிறுவனம் தொடர்பாக ஊழியர்கள் கொண்டுள்ள விழிப்புணர்வு பற்றி அறியலாம்
4. விலகும் ஊழியர்களின் எதிர்பார்ப்பும், நிறுவனத்தினது பொறுப்பும் இணைந்து காணப்படுகின்றதா என அறியலாம்
5. இடர்களை இனங்கண்டு அதற்கான தீர்வுகளை உடனடியாக வழங்கக்கூடியதாக இருத்தல்.

(2 x 1/2 = 1 புள்ளி)

ஆ) தரவு ⟶ செயன்முறை ⟶ தகவல் (1 புள்ளி)

தரவுகளை தகவல்களாக மாற்றும் செயன்முறை இதுவாகும்.

- நாளாந்த கொடுக்கல் வாங்கல்களைப் பயன்படுத்தி நிதி அறிக்கைகளைத் தயாரித்தல்.
- வேறுபட்ட தரவுகளை இணைத்து தகவல்களாக மாற்றுதல்.

(1 புள்ளி)

(ii) (அ) மூலங்களின் அடிப்படையில் தகவல்களை வகைப்படுத்தும் வழிகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) தரவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு கம்பனி ஒன்று கையாளக்கூடிய முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

அ) மூலங்களின் அடிப்படை -
1. உள்ளக
2. வெளியக
3. அடிப்படை
4. இரண்டாம் நிலை

(4x1/2 = 2 புள்ளிகள்)

ஆ) 1. முறையான மற்றும் பலமான இரகசிய குறியீட்டைப் பயன்படுத்தல்.
2. அனைத்து கணனிகளுக்கும் பாதுகாப்பு வழங்கல்.
3. வைரஸிலிருந்து பாதுகாத்தல்.
4. தொடர்ச்சியான பராமரிப்பு மற்றும் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல்.
5. தகவல்களை வேறொரு இடத்தில் பாதுகாப்பாக வைத்தல். (Backup)
6. அதிகாரம் அளிக்கப்படாதவர் பயன்படுத்துவதை தடை செய்தல்

(2 x 1 = 2 புள்ளிகள்)

(iii) (அ) 'தந்திரோபாயத் தகவல் முறைமைகள்' (SIS) என்பதனை விபரித்து நிறுவனமொன்றிற்கு அதன் அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) நடுத்தர மட்ட முகாமையாளர்கள் தீர்மானங்களை மேற்கொள்வதில் முகாமைத்துவத் தகவல் முறைமை எவ்வாறு உதவுகின்றது என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

அ) அமைப்பொன்றின் தந்திரோபாய இலக்குகள் மற்றும் நோக்கங்களுக்கு ஆதரவளிப்பதற்கு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தந்திரோபாய தகவல் முறைமை ஆகும்.

(1 புள்ளி)

அனுகூலங்கள்

1. நீண்ட கால தீர்மானங்களை எடுக்க ஆதரவளித்தல்.
2. உயர்மட்ட முகாமையாளருக்கு தேவைப்படுகின்ற சுருக்கமான தகவல்களை பெறும் இயலுமை.
3. வினைத்திறனை அதிகரிக்கும் இயலுமை
4. போட்டி நலனை அடையக்கூடிய இயலுமை.
5. பயனுறுதியான வளமுகாமைக்கு உதவுதல் (2 x 1/2 = 1 புள்ளி)

ஆ) 1. கடந்தகால அறிக்கைகள் மற்றும் தற்போதய செயற்றிறன் தொடர்பாக நடுத்தர முகாமையாளருக்கு வசதிகளை ஏற்படுத்தல் (தரவுகளைச் சேகரித்தல்).
2. நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம், வருடாந்த தகவலை பகுப்பாய்வு செய்ய அல்லது தேவைப்படும் போது விசேடஅறிக்கை தயாரித்தல்
3. மேலே தரப்பட்ட சூழ்நிலைகள் தொடர்பான தீர்மானங்கள் எடுத்தல்

(2 x 1 = 2 புள்ளி)

(iv) (அ) வணிகங்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் ஆகிய இருசாராருக்கும் சமூக ஊடகங்கள் அச்சுறுத்தலாக மாறக்கூடிய சந்தர்ப்பங்கள் இரண்டு வீதம் குறிப்பிடுக. (02 புள்ளி)

(ஆ) நிறுவனமொன்றிற்கு வணிகத் திட்டம் தேவைப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளி)

அ) **வணிகங்களுக்கு**

1. தேவையற்ற விமர்சனங்களுக்கு உட்படுதல்
2. நிறுவனத்தின் நன்மதிப்பு மோசமாக பாதிப்படைதல்
3. உயர் போட்டி சவால்களை எதிர் கொள்ளல்.
4. புலமைச் சொத்து தொடர்பில் இடர் காணப்படல் (2x1/2 = 1 புள்ளி)

வாடிக்கையாளர்களுக்கு

1. தவறான கொள்வனவுத் தீர்மானம் எடுத்தல்.
2. தவறான தகவல்களை வழங்கல்.
3. தனிமை தொடர்பான அக்கறையை சீர்குலைத்தல்
4. இணைய மிரட்டல் (Cyber Bullying)
5. தனிப்பட்ட மதிப்பிற்கு களங்கம் ஏற்படுதல் (2 x 1/2 = 1 புள்ளி)

ஆ) 1. புதிய வணிகம் ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில்
2. தற்போது இருக்கும் வணிகத்தை விரிவுபடுத்தும் போது
3. நிறுவனங்கள் இணையும் போது
4. வணிகங்கள் நவீனமயப்படுத்தும் போது
5. வணிகங்களைக் கொள்வனவு செய்யும் போது
6. கடனுக்கு விண்ணப்பிக்கும் போது

(4x1/2 = 2 புள்ளி)

(v) (அ) 'பசுமை உற்பத்திப்பொருட்கள்' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) பசுமை உற்பத்திப்பொருட்களின் மூலம் நுகர்வோருக்கு கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் நான்கினை எழுதுக. (02 புள்ளிகள்)

அ) பொருளொன்றின் உற்பத்தியின் போது உற்பத்தி, பயன்பாடு, அகற்றுதல் உள்ளடங்கலாக அதன் உற்பத்திப்பொருள் வாழ்கை வட்டத்தில் சூழலிற்கு ஏற்படும் தாக்கத்தைக் குறைக்கும் இலக்குடன் வடிவமைக்கப்படும், உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் பசுமை உற்பத்திப்பொருட்கள் ஆகும். (2 புள்ளிகள்)

ஆ) 1. உடல் ஆரோக்கியம்

2. கழிவுகளை அகற்றம் போது குறைந்த பிரச்சினைகள்

3. சூழல் பாதுகாப்புக்கு பங்களிப்புச் செய்தல்.

4. சுகாதாரமான , தரமான பொருட்களை நுகர முடிதல்.

5. கிரய சேமிப்பு

6. சூழலின் காபன் செறிவைக் குறைத்தல்

7. வளப்பாதுகாப்பு (4x1/2= 2 புள்ளிகள்)